இதழ் 354
30 ஆகஸ்ட் 2025
14 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1



## ஆகஸ்ட் 30
## சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் நாள்



விதுரன்

## ரணிலின் கைது:
## அரசியல் கலாசார மாற்றமும் அரசியலமைப்பு அதிகாரமும்

நேர்காணல்

## தமிழீழ மக்களுக்கான தீர்வு
## ‘பொது வாக்கெடுப்பு’ - கருத்தரங்கம்



திரு. தமிழினியன் – நாடுகடந்த தமிழீழ அரசின் உறுப்பினர்



வேல்ஸில் இருந்து அருஸ்

## அமெரிக்கா உருவாக்கப்போகும்
## விடுதலை இயக்கம்


© 2025 இலக்கு இணையம்

## செம்மணி: மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 187 ஆக உயர்வு



செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்றைய தினம் (29) 10 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் 10 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்று ஐந்தாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், நேற்றைய தினம் 37 ஆவது நாளாக அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை கட்டம் கட்டமாக இதுவரையில் 44 நாட்கள்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ளுங்கள் - ஐ.நா மீது அழுத்தம் அதிகரிக்கிறது

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் ஊழியர்களிடமிருந்து ஜெனீவாவில் உள்ள உயர் ஆணையர் வோல்கர் டர்க்கிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் இனப்படுகொலை என்பதை ஒப்புக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மீது அழுத்தங்களை அதிகரித்துள்ளது.

“இனப்படுகொலைச் செயல்களைக் கண்டிக்க மனித உரிமைகள் ஆணையருக்கு வலுவான சட்ட மற்றும் தார்மீகப் பொறுப்பு உள்ளது, மேலும் நடந்து வரும் இனப்படுகொலையைக்



கண்டிக்கத் தவறுவது ஐ.நா. மற்றும் மனித உரிமைகள் அமைப்பின் நம்பகத்தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது” என்று இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளவில் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## கிறீன்லாந்தில் போராட்ட பிரிவினைவாத குழுக்களை உருவாக்கும் அமெரிக்கா




டென்மார்க்கின் மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி பிரதேசமான கிரீன்லாந்தில் அமெரிக்க செல்வாக்கு நடவடிக்கைகள் இரகசியமாக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் தொடர்பாக, டென் மார்க் நாட்டின் உயர்மட்ட அமெரிக்க தூதரை டென்மார்க் அரசு வரவழைத்து பேசியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புடன் தொடர்புடைய குறைந்தது மூன்று அமெரிக்கர்கள் கிரீன்லாந்தில் செல்வாக்கு செலுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டதாக தேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பொது ஒளிபரப்பாளரான டி.ஆரின் கூற்றுப்படி பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட எட்டு வட்டாரங்கள் இந்த நடவடிக்கைகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## ஈழக அகதிகளுக்கு குடியுரிமை கோரி கையெழுத்து போராட்டம்


தமிழகத்தில் உயர்கல்வி, அரசு வேலைவாய்ப்பு வாக்குரிமை வாழ்வுரிமையற்ற இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் எனவும், சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்யக் கோரியும் ஈழ அகதிகள் பாதுகாப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பா.புகழேந்தி அவர்களின் ஒருங்கிணைப்பில் கையெழுத்து போராட்டம் ஒன்று வரும் மாதம் 1ம் திகதியில் இருந்து 15ம் திகதி வரையில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது குறித்து வழக்கறிஞர் பா.புகழேந்தி அவர்கள் கூறுகையில், புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் அந்தந்த நாடுகளில் அகதியாக பதிவு செய்யப்பட்டு, குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் வழக்கறிஞராக, மருத்துவராக ஆக முடிகிறது.

அத்தோடு அரச வேலைகளையும் பணி செய்ய முடிகிறது. சிலர் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் கூட அந்த நாடுகளில் ஆகிவிடும் சூழல் வருகிறது. ஆனால் தமிழகத்தில் 20,30,40 ஆண்டுகளாக இருக்கும் ஈழத்தமிழர்கள் சட்டவிரோத குடியேறிகள் என அறிவிக்கப்பட்டு எந்த வித உரிமையும் அற்றவர்களாக இந்திய அரசாலும் ஆளும் தமிழக அரசாலும் தொடர்ந்து ஒடுக்குமுறைக்கு ஆளாகி வருகின்றார்கள். அவர்கள் இந்தியாவில் இருந்து

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## கிறீன்லாந்தில் டென்மார்க் செய்த இனப்படுகொலை



கிரீன்லாந்தில் பிறப்பு விகிதத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் கட்டாயப்படுத்தப்பட்ட கருத்தடை பிரச்சாரத்திற்காக டேனிஷ் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் மன்னிப்பு கோரியுள்ளார். சர்ச்சைக்குரிய இந்த திட்டத்தில் ஆயிரக்கணக்கான இளம் கிரீன்லாந்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அவர்களின் அறிவு அல்லது ஒப்புதல் இல்லாமல் கருப்பையக சாதனங்கள் (IUDs) பொருத்தப்பட்டுள்ளன.

இந்த நடைமுறை முக்கியமாக 1960கள் மற்றும் 1970களில் இடம் பெற்றிருந்தது,அதே நேரத்தில் கிரீன்லாந்தின் சுகாதார

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## முள்ளிக்குளத்திலிருந்து கடற்படையினர் வெளியேறுவது எப்போது

### ரவிகரன் பா.உ கேள்வி

மன்னார் முசலி, பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளத்தில் மக்களின் காணிகளையும், வீடுகளையும் அபகரித்துள்ள கடற்படையினர் அங்கிருந்து வெளியேறி, முள்ளிக்குளம் கிராமமக்கள் எப்போது மீள்குடியேற்றப்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் இவ்விடயத்தில் தம்மால் ஆலோசனை பெறுவதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு




அமைச்சிடமிருந்து ஆலோசனை கிடைக்கப்பெற்றவுடன் இந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## செயற்கை நுண்ணறிவால் வேலை பறிபோகும் இளம் தலைமுறையினர்

அமெரிக்கா முழுவதும் செயற்கை நுண்ணறிவால் பாதிக்கப்பட்ட துறைகளில் இளம் நிபுணர்களுக்கான வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் 13% குறைந்துள்ளதாக ஸ்டான்போர்ட் டிஜிட்டல் எகனாமி ஆய்வகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது. ஸ்மார்ட் தொழில் நுட்பங்கள் தொடக்க நிலை தொழிலாளர்களுக்கான தொழில் வாய்ப்புகளை விரைவாக மறு வடிவமைத்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆட்டோமேஷன் காரண




மாக சுருங்கி வரும் துறைகளில் வேலை தேடுவதில் சமீபத்திய கல்லூரி பட்டதாரிகள் சிரமப்படுகிறார்கள் என்ற கவலைகள் அதிகரிக்கிறது. செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய வேலை வாய்ப்பு விளைவுகள் பற்றிய ஆறு உண்மைகள்’ என்ற அறிக்கை,

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# செம்மணியைத் திசைதிருப்பும் நோக்கமா? அல்லது தமிழ்–முஸ்லீம் இனவாதத்தைத் தூண்டும் நோக்கமா?

**தாமோதரம் பிரதீவன்**
மனித உரிரிமை செயற்பாட்டாளர்,
அம்பாறை மாவட்டம்.

*மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள் மடத்தில், காத்தான்குடி முஸ்லிம்கள் படுகொலை செய்யப் பட்டதாகக் கூறப்படும் இடத்திற்குப் பாதுகாப்பு வலய மாக ஏற்பாடுகள்.*



குருக்கள்மடம் மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப் பித்துள்ள விடயத்தை நோக்கும்போது, குறித்த புதைகுழி அமைந்த பிரதேசம் என அறியப்படும் குருக்கள்மடம் கடற்கரைப் பிரதேசத்தை அண்டிய அந்த இடத்தைப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி, களுவாஞ்சிகுடி பொலிஸ் பாதுகாப்பு வழங்க, களுவாஞ்சிகுடி நீதவான் நீதி மன்ற நீதிபதி (25/08/2025) உத்தரவிட்டார்.

1990 ஆம் ஆண்டு, புனித ஹஜ் யாத்திரையை முடித்துக்கொண்டு கல்முனை வழியாகக் காத்தான் குடிக்குப் பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டுக் கடத்தப்பட்டு, குருக்கள்மடத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.

இந்தக் கொலைகளை விடுதலைப் புலிகளே செய்தனர் என கூறப்படும் நிலையில், பாதிக்கப்பட்ட வர்களின் குடும்பம் சார்பாக A.M.M. ரவூப் என்பவரால் களுவாஞ்சிகுடி காவல் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாட்டிற் கமைவாக களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றில் நடந்துவந்த வழக்கில்தான் (25.08.2025) கௌரவ நீத வானால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.



இந்த விவகாரத்தை இவ்வளவு காலம் கடந்து, பல முஸ்லீம் அமைச்சர்கள், முதலமைச்சர்கள், நீதி அமைச்சர் என பல முஸ்லிம்கள் கடந்த பல அரசுகளின் முக்கியஸ்தர்களாகவும் பங்காளிகளாகவும் இருந்து வந்த நிலையில், இந்த விவகாரம் பற்றிப் பேசாமல் இருந்து விட்டு, ஏன் தற்போது செம்மணி விவகாரம் சூடுபிடிக்கும் தறுவாயில் பேசுபொருளாக மாற்றுகின்றார்கள் எனும் கேள்வி எழுகிறது.

அத்தோடு, இவ்விவகாரம் பேசுபொருளாக மாறிவரும் நிலையில், இவர்கள் இதுபற்றிப் பேசினால் நாம் வீரமுனை, திராய்க்கேணி படுகொலைகள் பற்றிப் பேசுவோம்; அது ஏன், யாரால் செய்யப்பட்டது எனவும் பேசுவோம்; அவற்றையும் விசாரிக்கவும், அங்கும் அகழ்வுகள் நடக்கவும் வேண்டும் எனவும் தமிழர்களும் பேசிவரும் நிலையில், இந்த விவகாரங்கள் தமிழ்-முஸ்லீம் உறவைச் சீர்குலைக்கும் இனவாத சதியா

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இறைமையைத் தவிர்க்கும் (Not evasion) காலமல்ல உறுதிப்படுத்த வேண்டிய (But decision) நேரம்

கடந்த வாரத்தில். பிரான்ஸ்-பிரித்தானியா-யேர்மன் அரசதலைவர்கள் இணைந்து முக்கூட்டு தடையினை ஈரானுக்கு விதித்தனர். பிரான்சின் அரசத்தலைவர் மக்ரோனும் யேர்மனின் அரசத்தலைவர் மெர்கலும் இணைந்து இருநாட்டு அமைச்சர்களையும் ஒரே அவையாக அமைத்து அமைச்சரவையினை நடாத்தினர். இவ்வாறான புதிய செல்நெறிகள் உலக அரசியலில் தோற்றம் பெறுவதற்கு மூலகாரணமாக உள்ளது அந்த அந்த நாட்டின் பாதுகாப்பும் நாடுகள் உள்ள கண்டத்தின் பாதுகாப்பும் என்பதாக அமைகிறது. இன்றைய உலகு பாதுகாப்புக்கும் சந்தைக்குமாக கூட்டாண்மைகளையும் பங்காண்மைகளும் கொண்டதாக அரசியலை முன்நகர்த்தினாலும் இறைமை என்பதும் தன்னாட்சி என்பதும் பேரத்துக்கு உட்படுத்த இயலாதனவாகவே ஒவ்வொரு நாட்டிலும் உள்ளது என்பது கவனத்திற்குரியவொன்றாக உள்ளது. இதன் வழி சமகாலம் இறைமையைத் தவிர்க்கும் காலமல்ல (Not evasion)இறைமையை உறுதிப்படுத்த வேண்டிய நேரமாக (But decision) உலகின் தேசமக்கள் ஒவ்வொருவருக்கும் அமைகிறது என்பது முக்கியமான விடயம்.

அதிலும் ஈழத்தமிழர்கள் போன்ற உலகின் சிறுதேச இனங்கள்(Small Nation)காலனித்துவத்துக்கு பல நூற்றாண்டுகள் உள்ளாகியதன் விளைவாக தங்களின் அரசாக காலனித்துவ ஆட்சியாளர்களையும் அவர்கள் திணித்த சமகால அரசாங்கங்களின் படைபல ஆக்கிரமிப்பு ஆட்சியினையும் எதிர்த்து தங்களுடைய இறைமையின் அடிப்படையில் தங்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் வழி தங்களின் அரசியல் எதிர்காலத்தை அமைக்க இயலாமையுள்ளவர்களாக இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்புக்கு ஆளாகி தங்களின் இறைமை ஒடுக்கத்தையும் தன்னாட்சி இழப்பையும் தங்களின் நாளாந்த வாழ்வாக அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதற்கு ஈழத்தமிழர்களும் பலஸ்தீனியர்களும் கண்முன்நிற்கும் உதாரணமாக உலகில் விளங்குகின்றனர்.

இந்நிலையில் நாடுகளல்ல, அமைப்புக்கள் அல்ல மக்களே தங்களின் இறைமையைத் தாங்களே மீளுறுதி செய்ய வேண்டியவர்களாகின்றர்கள். சனநாயக வழிகளில் ஈழத்தமிழர்கள் பிரித்தானிய காலனித்துவ அரசு எம்மிடம் இருந்து கைப்பற்றிய யாழ்ப்பாணம்-வன்னி அரசுகளுக்கு உரிய இலங்கையின் வடக்கு கிழக்கு நிலப்பகுதிகளான இந்த மண் எங்களின் சொந்த மண் என்னும் இறைமையை உறுதியின் உறைவிடமாக நின்று மீளுறுதிப்படுத்தி விழ விழ எழுவோம் என்னும் தளரா முயற்சியால் தன்னாட்சியினை மீள்உற்பத்தி செய்வதன் வழி மட்டும்தான் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் சமகாலத்தில் மீளுருவாக்கம் செய்ய முடியும் என்பது இலக்கின் எண்ணமாக உள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமையை மீளுறுதி செய்ய முயற்சிப்பது எந்த வகையில் பிரிவினையாகும். ஈழத்தமிழர் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் தேசியத்தை தங்களின் தன்னாட்சி வழி வளர்த்து தங்களுக்கான பாதுகாப்பான அமைதியான வாழ்வை வளர்ச்சிகளை அமைக்க முயல்வது எந்த வகையில் பயங்கரவாத நடவடிக்கையாகிறது. இந்தக் கேள்விகள் அனைத்துலக மக்கள் மத்தியில் எழுப்பப்படாததே உலகின் மௌன நிலைக்குக் காரணம் என்பது இலக்கின் உறுதியான கருத்தாகவுள்ளது. அதாவது ஒவ்வொரு உன்னதத்தையும் உழைப்பால்தான் உச்சப்படுத்த முடியும். உழைப்பிற்கு செயலணி தேவை. சமூகத்தில் நாங்கள் என்ற உள்ளுணர்வு எங்கள் என்ற உரிமை உணர்வாக மாறாவிட்டால் தாயகம் காப்பது கடமை என்பது வாழ்வாகாது. இன்று ஈழத்தமிழர்களிடை "நாங்கள்" என்ற உள்ளுணர்வு, "எங்கள்" என்ற உரிமை உணர்வுகளை சீரழிக்கும் செயல்கள் எல்லையற்றனவாக வளர்கின்றன. சமூக ஊடகங்கள் இதனை ஊதிப்பெருப்பிக்கின்றன.

15.01. 1946 இல் அகில இலங்கை தமிழ்க்காங்கிரசின் இணைச்செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் அக்கால பிரித்தானிய பிரதமராக இருந்த லேபர்கட்சித்தலைவர் அட்லி அவர்களுக்கு அனுப்பிய "முன்மொழியப்பட்டுள்ள சிலோன் அரசியலமைப்பு குறித்த அகில இலங்கை தமிழ்க்காங்கிரசின் கடிதத்தில்" (339 Co 54/986/9/1, no.9. British Documents on the End of Empire, Series B Volume 2-Sri Lanka Editor K.M.De Silva-Part Towards Independence 1945-1948 page 178) மிகத்தெளிவாக எடுத்து விளக்கி சோல்பரி அரசியலமைப்பை இலங்கை தமிழர்கள் நிராகரிப்பதாக வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். எனவே 79 ஆண்டுகளாக ஈழத்தமிழர்களால் நிராகரிக்கப்பட்டு வரும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சி பாராளுமன்ற முறைமையின் கீழேயே தங்களுக்கு அரசியல் அதிகாரப்பரவலாக்கத்தை இன்றைய ஈழத்தமிழ்ச் சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்பதே இன்றும் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கான அனைத்துலக சட்ட அடிப்படையிலான தீர்வுகளோ பாதுகாப்போ எதுவுமே கிடைக்காதிருப்பதற்கான மூலகாரணம் என்பதை ஐக்கியநாடுகள் சபை தொடக்கம் பெற்ற இரண்டாவது ஆண்டில் எழுதப்பட்ட இந்தக் கடிதம் தெளிவாக எடுத்து விளக்குகிறது. இன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் இந்த செப்டெம்பர் மாத 60வது ஆண்டமர்வில் கூட ஈழத்தமிழர்கள் மேலான சிறிலங்காவின் யுத்தக்குற்றச் செயல்கள், மனிதாயத்துக்கு எதிரான குற்றங்கள், மனித உரிமைகள் வன்முறைப்படுத்தல்கள் எதற்குமே குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனை நீதியோ அல்லது ஈழத்தமிழர்களுக்கான பரிகாரநீதியோ எதுவும் கிடைக்கப்போவதில்லை. அதற்கு மாறாக சிறிலங்கா அரசாங்கத்தை உறுதியான அரசாக மாற்றுவதற்கான நெறிப்படுத்தல்களும் மதிநிதி ஆதரவுகளுமே அதிகரிக்கப்படும். ஏனெனில் ஐக்கிய நாடுகளின் வல்லாண்மை நாடுகளுக்கும் பிராந்திய மேலாண்மை நாட்டுக்கும் சிறிலங்காவுடனான தங்களின் கூட்டாண்மை பங்காண்மை தொடர்பாடல்களும் உறவாடல்களுமே இன்றைய தேவையாக உள்ளன.

இன்றைய உலகில் அரசாங்கங்கள் எத்தகைய வேறுபாடான சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக அல்லது தத்துவக் கொள்கைகளைக் கொண்டனவாக இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது ஒரு பொது விருப்பில் தங்களிடம் உள்ள மாறுபாடுகள் வேறுபாடுகளைக் கடந்து இணைந்து அந்த பொதுவிருப்பை நடைமுறையாக்க முன்வைத்ததை "விருப்பாளர்களின் இணைவு" என்ற புதுவகைக் கூட்டாண்மை பங்காண்மையை இன்றைய பிரித்தானியப் பிரதமர் கெயர் ஸ்ராமர் , உக்ரேனுக்கான ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு என்னும் பொதுநோக்கில் தொடக்கி வைத்தமை உலகறிந்த விடயம். இந்நிலையில் அரசைக் கொண்டிராத நிலையில் உள்ள சிறுதேச இனங்கள் தங்களுக்கான பாதுகாப்பை தங்கள் மக்களின் அறிவுப்பலம் தங்கள் மண்ணின் இயற்கை வளம் இவற்றினை உற்பத்தியாக்க வல்ல தொழில்நுட்பப் பலமும் மூலதனமும் ஏற்படத்தக்க வகையில் உலகளாவிய ஈழத்தமிழினத்தின் வழியாகக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதே இலக்கின் கருத்து அதே போன்று இன்று ஐரோப்பிய இராணுவம் என்னும் ஒன்றின் கட்டமைப்பு முயற்சியை பிரான்சு முன்னெடுக்கத் தொடங்கியதன் வழி கண்டங்களின் அரசியல் வேகம் பெற்று வருகிறது. ட்ரம்பின் வர்த்தகப் போட்டி வேறு கண்ட அரசியலை காலத்தின் தேவையாக்குகிறது. இதுவே இந்திய சீன நட்பு என்னும் புதிய அரசியல் தோற்றம். ஆதலால் அரசியல் ராஜதந்திரமிக்க செயற்பாடுகள் வழியாகவே ஈழத்தமிழர்கள் புதிய உலக அரசியல் ஒழுங்கை எதிர்கொள்ள வேண்டிய காலமிது என்பது இலக்கின் மற்றொரு கருத்து.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் இருப்பனவற்றை இருப்பனவாகவே செயற்பட அனுமதித்து தங்களின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக தேவைகளுக்கான மக்கள் செயலணிகளை சிறு சிறு குழுமங்களாகச் சுயாதீனமாகக் கட்டியெழுப்புவதன் மூலமே மீளவும் தேசநிர்மாணத்தை உறுதியாகவும் அறிவுபூர்வமாகவும் அனைத்துலக இணைப்புடனும் கட்டியெழுப்பலாம் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது.

**ஆசிரியர்**



# ரணிலின் கைது:
## அரசியல் கலாசார மாற்றமும் அரசியலமைப்பு அதிகாரமும்

விதுரன்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது இலங்கை சிங்கள தேசிய பௌத்த அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக மாறியுள்ளது. இது அரசியல் பழிவாங்கல் என்ற குற்றச்சாட்டுகளுக்கு அப்பால், நாட்டின் அரசியல் கலாசாரம், அரசியலமைப்பு விவாதங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒன்றுகூடலை முன்னிறுத்தி ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது. இந்த கைது தனிப்பட்ட தலைவருக்கு ஏற்பட்ட நிலைமையாக மட்டும் இல்லாமல், பல முக்கிய கேள்விகளை எழுப்பியிருக்கிறது.




ரணில் விக்கிரமசிங்கவின் கைது செய்யப்படுவதற்கு அவர், ஜனாதிபதியாக பதவி வகித்தபோது 2023 செப்டம்பர் 13 முதல் 20 வரையான காலத்தில் கியூபா மற்றும் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தைத் தொடர்ந்து, செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய இரண்டு நாட்களுக்கு, லண்டனில் உள்ள வோல்வர்ஹாம்டன் பல்கலைக் கழகத்தில் தனது மனைவி, பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க 'கௌரவப் பட்டம்' பெறும் நிகழ்வில் கலந்துகொண்டார்.



மைத்திரி விக்கிரமசிங்க, களனி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகவும், பாலின ஆய்வுகள் தொடர்பான துறைக்கு நிறுவனராகவும் இருந்துள்ளார். அவர் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்தவர் என்பது முக்கியமான விடயம்.



அதே நேரம், லண்டனுக்குச் சென்ற மேற்குறித்த இரண்டு நாட்கள் பயணத்தை ரணில் தம்பதியினர் ஒரு தனிப்பட்ட விஜயமாக வெளிப்படுத்தாது அதற்கான செலவுகளுக்கு அரசாங்க நிதியை பயன்படுத்தியுள்ளார் என்பது தான் பிரதான குற்றச்சாட்டாகும்.

குறித்த இரு நாட்களுக்கு மட்டும், ஜனாதிபதி செயலகம் மற்றும் பொலிஸ் பாதுகாப்புச் சேவை உட்பட, சுமார் 166 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ரணில் தம்பதியினரின் தனிப்பட்ட விஜயம், பின்னர் உத்தியோகபூர்வ விஜயமாக ஆவணங்களில் மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையில், ரணில் ஜனாதிபதியாக இருந்தபோது அவரது தனிப்பட்ட செயலாளராக இருந்த சாண்ட்ரா பெரேரா, முதலில் ஒரு தனிப்பட்ட விஜயமாகத்தான் கருதப்பட்டதாகவும், பின்னர் விக்கிரமசிங்கவே அதை தனிப்பட்ட விஜயம் அல்ல என்று கூறியதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.



மேலும், வோல்வர்ஹாம்டன் பல்கலைக் கழகம் லண்டனில் 206கிலோமீற்றர் தொலைவில் இருந்தபோதிலும், விக்கிரமசிங்க லண்டனில் உள்ள ஆடம்பரமான ஹோட்டலான லாண்ட் மார்க்கில் தங்கியிருந்துள்ளார். இதனால், வாகன வாடகை, உணவு என்று தங்கிய நாட்களில் அதிக செலவுகள் செய்யப்பட்டிருப்பது போன்றவை முறைகேடுகளுக்கு ஆதாரமாக சுட்டிக்காட்டப் படுகின்றன.

இலங்கை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிப்பீடத்தை அலங்கரித்தவர் ரணில். ஆறு முறை பிரதமராகப் பதவி வகித்த ஒருவர், அத்தகையவர் கைது செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த நடவடிக்கையின் மூலமாக 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்பதை நிரூபிப்பதாகக் கூறினாலும், இதுவொரு திட்டமிட்ட அரசியல் நாடகமாகவே பரவலாகக் கருதப்படுகிறது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க 1977 கலவரம், யாழ் நூலக எரிப்பு, 1983 ஜூலை கலவரம், 1988-1989 ஜே.வி.பி. கிளர்ச்சி, மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி போன்ற பல கடுமையான குற்றச்சாட்டுகளை ரணில் மீது அடுக்கியிருந்தார்.

ஆனால், இந்த பாரிய குற்றங்களுக்குப் பதிலாக, அரசாங்க நிதியைப் பயன்படுத்தி தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டார் என்ற அற்பமான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அரசாங்கத்தின் இச்செயற்பாடு தனது இல்லத்தை ரோயல் கல்லூரிக்கு எழுதிவைத்துள்ள ரணில் போன்றவருக்கு எதிராக நியாயப்படுத்தக்கூடியதாக காணப்படவில்லை. அரசாங்கம் அதன் சட்ட ரீதியான கடமையின் பேரிலானதல்ல, மாறாக அரசியல் பழிவாங்கல்தான் என்ற சந்தேகத்தை வலுப்படுத்தி பொதுமக்கள் மத்தியில் அனுதாப அலையை உருவாக்கியுள்ளது.

இந்த நடவடிக்கை, ஒருபுறம் அரசாங்கத்தின் வலுவான நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதாக தோன்றினாலும், மறுபுறம் அதன் பலவீனத்தையும் அனுபவமின்மையையும் வெளிப்படுத்தியுள்ளது.

தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலைமை இன்னமும் உள்நாட்டில் நீடிக்கிறது என்பதும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தண்டனையிலிருந்து தப்பிக்க

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ஈழப் போராட்டங்களும் ஜெனிவா தீர்மானங்களும்!

பா. அரியநேத்திரன்

எதிர்வரும் 2025 செப்டம்பர் 08ல் ஜெனிவாவில், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 60வது அமர்வு ஆரம்பமாகி, இலங்கை தொடர்பான தீர்மானம், அறிக்கை என்பன 2025, செப்டம்பர் 15ல் வெளிவரவுள்ள நிலையில், தமிழ்தேசிய அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் என பலதரப்பட்டவர்கள் அறிக்கைகள் அனுப்புவதும், கையொப்பங்களைச் சேகரிக்கும் போராட்டங்களும், பேரணிகளும் தொடர்ச்சியாக இடம்பெறுவதைக் காணலாம்.




இலங்கைப் போர் 2009, மே 18ல் மௌனித்த பின்னர், 2011ல் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் (UNHRC) நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானம், இலங்கையில் போர் முடிவடைந்த பின்னர் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை வலியுறுத்தியது. இது இலங்கைக்குச் சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தி, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்ட முயற்சித்தது.




அதற்குப் பின்னரான 14 அமர்வுகளிலும் தொடர்ச்சியாக ஈழத் தமிழர்கள் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்திய போதும் கைகூடவில்லை. தற்போது 2025ல் 60வது கூட்டத்தொடரில், தமிழ்மக்களுடைய நியாயபூர்வமான கோரிக்கையை வலியுறுத்தி அதற்கான வேலைத் திட்டங்கள் களத்திலும், புலத்திலும் தமிழ்மக்கள் முன் எடுத்து வருகின்றனர்.

இம்முறை முக்கியமாகச் செம்மணி பகுதியில் நடந்த தமிழினப் படுகொலைகளின் சாட்சியமாகவும், ஆதாரங்களாகவும், 177க்கு மேற்பட்ட எலும்புக்கூடுகள் தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த 1994, நவம்பர் 13 தொடக்கம் 2005, நவம்பர் 19 வரை தொடர்ச்சியாக, இரு தடவைகள் நிறைவேற்று ஜனாதிபதியாக 'சமாதானப் புறா' என்று அடையாளப்படுத்தி செயல்பட்ட சந்திரிகாவின் காலத்தில் நடந்த தமிழினப் படுகொலைகளுக்குச் சாட்சியமாகவும், ஆதாரமாகவும் இப்போது கிடைத்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 2024, செப்டம்பர் 01ல் ஜனாதிபதி யாழ்ப்பாணம் செல்வதாகவும், அந்த வேளையில் செம்மணி புதைகுழியையும் பார்வையிடுவார் எனக் கூறப்படுகிறது. இலங்கை ஜனாதிபதி செம்மணி புதைகுழியைப் பார்வையிடுவதால், செம்மணிப் படுகொலைக்கான நீதியை உள்நாட்டு முறைமை மூலம் அளிக்க முடியும் என்ற கருத்து, ஜெனிவா மனித உரிமை 60வது கூட்டத்தொடரில் எதிரொலித்து, மீண்டும் இலங்கைக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்கான ஒரு நாடகமாகவே ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க செம்மணிக்குச் செல்லும் நடவடிக்கையைப் பார்க்கலாம். சர்வதேச அழுத்தத்தைக் குறைக்கவே அவருடைய செம்மணி புதைகுழி விஜயம் அமையும். இதனால் தமிழர்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை.

இலங்கையில் இதுவரை தோண்டப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இது இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. ஏற்கனவே இலங்கையில்:




***1. 2010, கொழும்பு துறைமுகப் பகுதியில் 88 எலும்புக் கூடுகள்***

***2. 2013, மாத்தறை வைத்தியாலைக்கு அருகில் 155 எலும்புக் கூடுகள்***

***3. 2013, திருக்கேதீஷ்வரம் மன்னாரில் 83 எலும்புக் கூடுகள்***

***4. 2018, மன்னார் சதோஷ மனிதப் புதைகுழியில் 378 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டது***

***5. 2023, கொக்குத் தொடுவாயில் 52 எலும்புக் கூடுகள்***

***6. 2025, செம்மணி புதைகுழியில் 177 (இச்செய்தி எழுதப்படும்வரை) எலும்புக் கூடுகள்***

இதில், இலங்கையில் முதலாவது அதிக எலும்புக் கூடுகள் 2018ல் மன்னார் சதோஷத்தில் 378 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இரண்டாவது இடத்தை தற்போது 2025ல் செம்மணிப் படுகொலை புதைகுழியில் 177 எலும்புக் கூடுகள் பிடித்துள்ளன.

செம்மணிப் புதைகுழியில் நூற்றுக் கணக் கான தமிழரின் எலும்புக்கூடுகள் வெளிவருவது போன்றே, 2009, மே 18, முள்ளிவாய்க்கால்வரை, வடகிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான புதைகுழிகளும், ஆயிரக் கணக்கான தமிழர்களின் எலும்புக் கூடுகளும் புதைகுழிகளுக்குள் உள்ளன என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று சனிக்கிழமை (30/08/2025) சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் நினைவு நாளாகும். இந்தப் போராட்டம் கடந்த 16 வருடங்களாக வடகிழக்கில் தொடர்ச்சியாக செப்டம்பர் 30ல் இடம்பெற்றுவருவது போன்று, இன்றைய போராட்டமானது வடக்கில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் மிகவும் எழுச்சியாகவும் பேரணியாகவும் இடம்பெறுகிறது.



அதில் முக்கிய வலியுறுத்தலாக, இனப் படுகொலைக்கான சர்வதேச விசாரணை தேவை என்பதை மீண்டும் வலியுறுத்தியே இந்தப் போராட்டமானது முன் எடுக்கப்பட்டது.

தற்போது புதிய ஜனாதிபதியாக, தேசிய மக்கள் சக்தி அரசின் அநுர குமார திசநாயக்க பதவி ஏற்று, எதிர்வரும் 2025, செப்டம்பர் 22ல் ஓராண்டு நிறைவடைகிறது. கடந்த ஒரு வருடமாக அநுர ஜனாதிபதியாக பதவியில் இருந்தும், அவரால் தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கிய பல விடயங்கள் செய்யப்படவில்லை. வடகிழக்கு தமிழர்களுக்கான அரசியல் தீர்வானாலும் சரி, மாகாணசபைத் தேர்தல்களானாலும் சரி, புதிய அரசியலமைப்பானாலும் சரி, இந்த ஒரு வருடத்தில் அவரால் மேற்கொள்ளப்படவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதாகக் கூடச் சொல்லியிருந்தார், அதனையும் இப்போது நடைமுறைப்படுத்துவதையும் காணவில்லை.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, யார் ஜனாதிபதியானாலும், அவர்கள் கேட்பது உள்நாட்டுப் பொறிமுறை மூலம் எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை; சர்வதேசப் பொறிமுறை ஊடாக இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என்பதையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கைக்குக் கடந்த 2025, ஜூன் 23ல் வருகை தந்து, யாழ்ப்பாணம் செம்மணிப் படுகொலை புதைகுழி, திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஊரகம் எல்லாம் நேரில் சென்று பார்த்த உயர்ந்தானிகர், அவர்கள் அனைவரினதும் ஒரே குரலாக சர்வதேச நீதியை மட்டுமே கேட்டனர். ஆனால் இவைகளைப் பார்வையிட்ட பின்னரும், கொழும்பு சென்ற உயர்ஸ்தானிகர், ஜனாதிபதி

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

கட்டுரை

# சர்வதேசத்திடம் நீதி கோரும் உறவுகள்





காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடராக பேசு பொருளாகியுள்ள நிலையில் வடகிழக்கு மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை தங்களுக்கு நீதி வேண்டி போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் சர்வதேச வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போனோர் தினம் 30.08.2025 அன்று அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் வடகிழக்கில் பாரிய எழுச்சி பேரணி அன்றைய தினம் இடம் பெறவுள்ளது. தமிழருக்கான நீதி, தங்கள் உறவுகளுக்கான நீதி வேண்டியும் இது இடம் பெறவுள்ளது.

காணாமல்போனஉறவுகளில்தங்களுடைய உறவுகளை தேடி பல போராட்டங்களை நடத்திய தாய்மார்களில் 300க்கும் மேற்பட்டோர்கள் இறந்துள்ளனர்.



இந்த நிலையில் இது குறித்து தம்பலகாமம் கோயிலடியை சேர்ந்த தாயான ந.அனுஷியா தெரிவிக்கையில் "2008ல் எனது கணவர் வவுனியாவில் வைத்து காணாமல் போயுள்ளார் இது வரைக்கும் அவர் தொடர்பான தகவல்கள் தெரியவில்லை வெளியில் சென்றவரே காணாமல் போயுள்ள நிலையில் தற்போது வரை எவ்வித பதில்களும் கிடைக்கவில்லை இது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம்,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்தோம் பதில் எதுவும் இன்றி குடும்ப பொருளாதார கஷ்டத்துடன் காலத்தை கடத்த வேண்டியுள்ளது எனது கணவர் தொடர்பான உண்மை தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் உண்மை நிலவரம் தெரிய வேண்டும் "என்றார்.

தற்போதைய அநுர அரசாங்கம் உட்பட ஆட்சிக்கு மாறி மாறி அரசாங்கங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஏமாற்றியுள்ளன. காணாமல் போனோருக்கான அலுவலகம் மற்றும் பல விசாரணை பதிவுகளை முன்னெடுத்த போதிலும் நிரந்தர தீர்வு கிடைக்காமை அம் மக்களை உளரீதி யான பாதிப்புகளுக்கு உள்ளாக்குகிறது.

சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடான விசாரணைதான் தேவை என்றும் உள்ளக விசாரணை பொறி முறையில் நம்பிக்கை இல்லை என்றும் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில் வடக்கில் செம்மணி மனித புதை குழி, கிழக்கில் சம்பூர் பகுதி புதை குழி தொடர்பிலும் பல எதிர்பார்க்க முடியாத நிலவரம் தோன்றியுள்ளது இங்குள்ள மனித எலும்புகள் தங்கள் உறவுகளாக கூட இருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

இது குறித்து வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போன உறவுகளின் திருகோணமலை மாவட்ட சங்க தலைவி செபஸ்டியன் தேவி தெரிவிக்கையில் "17வருடங்களாக எமது உறவுகளுக்காக போராடி வருகிறோம் போராடி போராடி உயிரிழப்புக்களை எம் தாய்மார்கள் சந்தித்தது மாத்திரமே மிஞ்சியுள்ளது சர்வதேச பொறி முறை ஊடாக விசாரணை வேண்டும் உள்நாட்டு பொறி முறை ஊடான விசாரணையில் நம்பிக்கையில்லை வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் தமிழ் உறவுகள் இதன் மூலமாக பாதிக்கப்பட்டுள்ளோம் 22 மாவட்டங்களில் மனித புதை குழி உள்ள நிலையில் அங்கு மனித எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது இது எமது உறவுகளுடையதாக கூட இருக்கலாம் இவ்வாறான புதை குழிகள் அனைத்தும் சர்வதேச நிபுணர்களின் உதவியுடன் தோண்டப்பட்டு ஆராய்ச்சிக்கு உட்படுத்தி உண்மை நிலை நாட்டப்பட்டு சர்வதேச நீதி கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் இந்த சர்வதேச காணாமல் போனோர் தினத்திலாவது தமிழர்களின் இனவழிப்புக்கு நீதி கிட்டுமா என ஏங்குகிறோம் அநுர அரசாங்கம் உள்நாட்டு பொறி முறை விசாரணையை விடுத்து சர்வதேச பொறி முறை ஊடான விசாரணை மூலமான நீதியை பெற்றுத் தரவேண்டும் முன்னாள் ஜனாதிபதியை கைது செய்து நான்கு நாட்களில் என்ன ஆனது இவர்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் எந்தவிதமான தீர்வும் இல்லை எல்லாமே பொய்யை தான் அரசாங்கம் கூறுகி றது எனவே சர்வதேச நீதி கிடைக்கும் என நம்புகி றோம்" என்றார்.



தமிழர்களின் இனவழிப்புக்கு காரண மானவர்கள் கண்டறியப்பட வேண்டும் என்ற

**கிண்ணியான்**

வடகிழக்கு தமிழ் தாயக மக்களின் கோரிக்கைகளாக காணப்படுகிறது எது எப்படியாக இருந்தாலும் காணாமல் போன உறவுகளுக்காக எந்த அரசாங்கமும் செவிசாய்க்கவில்லை.

1990ம் ஆண்டு எனது கணவரான ப.மதியழகன் காணாமல் போயுள்ளார் அப்போது 35 வயது இருக்கும் தம்பலகாமத்தில் வைத்து கடைக்கு சென்று வருகிறேன் என போனவரை காணவில்லை இராணுவத்தினர் கடத்தியுள்ளனர் இது தொடர்பில் பல முறைப்பாடுகளை செய்துள்ளேன் மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவை சங்கம் என பல வாக்கு மூலங்களை வழங்கிய போதிலும் பதில் கிடைக்கவில்லை இதனால் பொலிஸ் அறிக்கை மற்றும் மரண சான்றிதழை பெற்றுவிட்டேன் என தம்பலகாமம் கூட்டாம்புளியை சேர்ந்த ம.ரங்கநாயகி தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பலர் தங்கள் கணவன்மார்கள்,பிள்ளைகள் உறவுகளை இழந்தவர்கள் தொடர்ந்தும் கண்ணீர் வடித்த நிலையில் தொடர் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வரைக்கும் காணாமல் போனோர் விவகாரம் கொண்டு செல்லப்பட்டுள்ளது மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வடகிழக்கு காணாமல் போன உறவுகள் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்து, குறித்த விவகாரம் தொடர்பில் கேட்டறிந்ததுடன் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் ஆணையாளரிடம் மகஜரையும் கையளித்தனர்.

இலங்கை அரசாங்கம் மீதான நம்பிக்கையை இச் சமூகம் இழந்த நிலையில் சர்வதேச விசாரணையை கோருகிறது. அநுர குமார அரசாங்கமும் ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளது கடந்த அரசாங்கம் செய்ததை போன்றே செயற்படுகிறது மாற்றம் ஒன்றை கொண்டு வர முயன்றாலும் தமிழர்களின் இனவழிப்புக்கான நியாயம் கிடைக்கவில்லை என்பதை பல அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. இது குறித்து திருகோணமலையை சேர்ந்த சிவில் சமூக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கோகிலவதனி கண்ணன் தெரிவிக்கையில் "இலங்கையில் நடை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# தடைகளுக்கு மத்தியில் இந்தியா அடைந்த ஆதாயம்
# இலங்கை தவறவிட்ட பேரம்

மருதன் ராம்

21ஆம் நூற்றாண்டில் மாறிவரும் புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளுடன் முன்னோக்கி செல்ல வேண்டிய கட்டாய தேவை உருவாகியுள்ளது. எனினும் இலங்கை தேயிலைத் துறை பின்னோக்கியே செல்வதாக தரவுகள் தெரிவிக்கின்றன. உலக சந்தையில் போட்டியிடும் வலுவை இலங்கை தொடர்ச்சியாக இழந்து வருகின்றது.



தேயிலை நீண்ட காலமாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாகும். அதன் தனித்தன்மை ‘சிலோன் டீ’ என்ற நாமம் மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா சந்தைகளில் பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதன் மிகவும் விசுவாசமான கொள்வனவாளர்களில் ஈரானும் ஒன்றாக உள்ளது. ஈரான் இலங்கையில் இருந்து



ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மெட்ரிக் டன்களை இறக்குமதி செய்தது. 2013 ஆம் ஆண்டில், இலங்கை ஈரானுக்கு 38,420 மெட்ரிக் டன்களுக்கும் அதிக தேயிலையை ஏற்றுமதி செய்தது. இருப்பினும், 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. ஏற்கனவே பலவீனமாக இருந்த இலங்கை தீவின் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு பேரழிவு தரும் விளைவுகளுடன் இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மறுபுறம் உலக சந்தையின் சவால்களை சாதகமாக பயன்படுத்தி கொண்ட இந்தியா இந்த காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதியில் வளர்ச்சி போக்கை காட்டியுள்ளது. 2018ஆம் ஆண்டுக்குப் பிறகு, அமெரிக்கா, ஈரானின் அணுவாயுத திட்டத்திலிருந்து விலகியதைத் தொடர்ந்து, ஈரான் மீது அமெரிக்கா ஒருதலைப்பட்சத் தடைகளை மீண்டும் விதித்தது. இந்தத் தடைகள் முதன்மையாக ஈரானின் எண்ணெய் மற்றும் நிதித் துறைகளை குறிவைத்தன. இதனால் பாரம்பரிய வர்த்தகக் கூட்டாளிகள் அமெரிக்க டொலர்களில் பரிவர்த்தனை செய்யும் நடவடிக்கை கடினமானது. புவிசார் அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்த இந்தியா, ரூபாய்-ரியால் செலுத்தும் பொறிமுறையை செயற்படுத்தியது.



இந்த செயற்பாடு அமெரிக்க கட்டுப்பாடுகளை மீறாமல் ஈரானுக்கு தேயிலை, பாஸ்மதி அரிசி மற்றும் மருந்துகள் போன்ற அனுமதிக்கப்படாத பொருட்களை தொடர்ந்து ஏற்றுமதி செய்ய இந்தியாவை அனுமதித்தது. இந்த நிறுவன தொலைநோக்கு உடனடி முடிவுகளை அளித்தது. 2018 ஆம் ஆண்டில், இந்தியா ஈரானுக்கு சுமார் 24.7 மில்லியன் கிலோகிராம் தேயிலையை ஏற்றுமதி செய்தது. 2019ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 50 மில்லியன் கிலோகிராம்களுக்கு மேல் உயர்ந்தது.

ஒரே ஆண்டில் இரட்டிப்பு வளர்ச்சியை இந்தியா பதிவு செய்தது. ஈரான் விரைவாக இந்தியாவின் இரண்டாவது பெரிய தேயிலை இறக்குமதியாளராக மாறியது. அந்த ஆண்டு இந்தியாவின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் சுமார் 20% ஈரானின் சந்தைகளை சென்றடைந்தது.

மறுபுறம், தேயிலை வர்த்தகத்தில் வரலாற்று ரீதியாக ஆதிக்கம் செலுத்திய இலங்கை, அதன் வர்த்தக இணைப்பைப் பராமரிக்க சிரமப்பட்டது. 2021ஆம் ஆண்டில், இலங்கை, ஈரானுடன் தேயிலைக்கு எண்ணெய் என்ற பண்ட மாற்று திட்டமொன்றை அறிவித்தது. இந்த ஒப்பந்தம் நிலுவையில் உள்ள எண்ணெய் கடனை திருப்பிச் செலுத்த வடிவமைக்கப்பட்டது.



தேநீர் ஒரு தடைசெய்யப்பட்ட பொருள் அல்ல என்பதால் இந்த ஒப்பந்தம் புதுமையானதாகவும் தொழில்நுட்ப ரீதியாக சர்வதேச தடைகளுக்கு இணங்கவும் இருந்த போதிலும் அது இறுதியில் தோல்வியடைந்தது. அதிகாரத்துவ திறமையின்மை, காலநிலை மற்றும் உரத் தட்டுப்பாடு என்பன இந்த தோல்விக்கு வழிவகுத்தன. இதன் விளைவாக, 2020ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி 14,730 மெட்ரிக் டன்னாகக் குறைந்தது. இது 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 60% சரிவாகும். இதற்கிடையில், இந்த வெற்றிடத்தை நிரப்ப இந்தியா முன் வந்தது.

இலங்கை விநியோகஸ்த்தர்கள் விட்டுச் சென்ற வெற்றிடத்தை இந்திய தேயிலை ஏற்றுமதியாளர்கள் திறம்பட ஆக்கிரமித்தனர். தேயிலை வர்த்தகத்தில் இந்தியாவின் இலாபங்கள் தற்செயலானவை அல்ல. அவை கணக்கிடப்பட்ட முடிவுகள். நிறுவன தொலைநோக்கு மற்றும் இராஜதந்திர செயற்பாடுகளின் விளைவாகும். பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் ஈரானுக்கு ஏற்றுமதிகளை விரிவுபடுத்துவதன் மூலமாக, இந்தியா தமது நெருக்கடியை அந்நியச் செலாவணியாக மாற்றியது. இலங்கையைப் பொறுத்தவரை, அந்த நிலைமை மிகவும் கவலையளிக்கிறது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

நேர்காணல்

# தமிழீழ மக்களுக்கான தீர்வு ‘பொது வாக்கெடுப்பு’ - கருத்தரங்கம்



**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு நாடுகடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் திரு. தமிழினியன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது. இந்த நேர்காணலை காணொளியில் முழுமையாக பார்வையிட YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**நிகழ்ச்சி தொகுப்பாளர்:**

**இந்த நிகழ்வை சென்னையில் ஏன் நடத்தாமல், புதுச்சேரிக்கு மாற்றினர்கள்?**

**திரு. தமிழினியன்:**

தமிழகத்தில் திமுக அரசு ஈழத் தமிழர்களின் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியான தடைகளை விதித்து வருகிறது. 2022ல் நாம் சென்னையில் நடத்த திட்டமிட்ட கூட்டத்தை, பொய்ச் செய்திகளைப் பரப்பி தடுத்தனர். பின்னர் துவேகா அலுவலகத்தில் நடத்த முயன்றபோது, காவல் துறை முற்றுகையிட்டு, பங்கேற்பாளர்களை கைது செய்து துன்புறுத்தியது. அடுத்த ஆண்டும் இதேபோல் தடை உண்டாக்கப்பட்டது. இதனால் தமிழக அரசின் ஒத்துழைப்பில்லாத நிலையில், புதுச்சேரியில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

**நிகழ்ச்சி தொகுப்பாளர்:**

**ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை தமிழகத்தில் தடைசெய்யப்படுவது ஏன்? ஈழத் தமிழர்கள் தமிழகக் கட்சிகளை அணுகும் முறையில்தானா குறைபாடு இருக்கிறது? ஒரே கட்சி சாராமல், எல்லா கட்சிகளுடனும் பேச வேண்டும் என்றால் அதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**திரு. தமிழினியன்:**

ஈழத்த தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகளாக, தமிழகத்தில் வசிக்கின்ற அனைத்து தமிழர்களும் நினைக்கிறார்கள் என்பதில் எந்த விதமான மாற்று கருத்தும் இல்லை. தமிழக மக்கள், ஈழ தமிழர்களை, தங்களுடைய தொப்புள் கொடி உறவுகளாக, தங்கள் இரத்த உறவுகளாக தான் கருதுகிறார்கள்; அப்படித்தான் நினைக்கிறார்கள், நேசிக்கிறார்கள்.

ஆனால், கட்சி தலைமைகளாக இருப்பவர்கள் எல்லாம் அந்த உணர்வோடு இருக்கிறார்களா என்பது ஒரு கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, தமிழர் அல்லாத தலைமைகளைக் கொண்ட கட்சிகள், ஈழத்த தமிழர்களுக்கு எந்த விதத்திலும் உறுதுணையாக இல்லை என்பதுதான், கடந்த கால கசப்பான வரலாற்று உண்மையாக நமக்கு இருக்கிறது.

அந்த வகையிலே, ஆட்சி செய்கிற திராவிட முன்னேற்ற கழகம், ஈழ தமிழர்களுக்கு தொடர்ச்சியாக, எல்லா காலங்களிலுமே எதிராக இருந்திருக்கிற, அந்த வரலாற்று பதிவுகள் தான் நமக்கு கண் முன்னே தெரிகிறது. அவர்கள் இன்று வரை அதிலிருந்து மாறவில்லை, மீளவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு செய்தியாக இருக்கிறது.

“இந்தியாவிற்கு ஈழம் பாதுகாப்பாக இருக்க வேண்டும், ஈழத்திற்கு இந்தியா பாதுகாப்பாக இருக்க வேண்டும்” என்கின்ற கருத்து மிக ஆழமானது. இந்தியாவினுடைய வெளியுறவு துறை கொள்கைகளில் போதிய மாற்றங்களை வேண்டும் என்று, நாடுகடந்த தமிழ அரசாங்கம் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இலங்கையிலே தமிழர்கள் தங்களுக்கான ஒரு தனி அரசை ஏற்படுத்துவது மட்டும்தான்; எதிர் காலத்திலே, இந்தியாவிற்கான பாதுகாப்பு அரணாக இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.




மிக நீண்ட காலமாக, இந்தியாவினுடைய வெளியுறவு கொள்கை, மோசமான ஒரு சூழ்நிலையிலேயே இலங்கை பிரச்சினையை அணுகி வருகிறது. அதிலிருந்து ஒரு போதிய மாற்றத்தை, இந்திய அரசினுடைய வெளியுறவு கொள்கை வகுக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்தியா ஈழ தமிழர்களுக்கான நட்புச் சக்தியாக இருக்க வேண்டும் என்று, ஈழ தமிழர்கள் அனைவரும் விரும்புவது போலவே, தமிழக தமிழர்களும், இந்திய ஈழ தமிழர்களுக்கு துணையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். உண்மையிலேயே, இந்தியாவை நேசிக்கிறவர்கள் தமிழகத்திலே தான் இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

ராஜீவ் காந்தி, இந்திரா காந்தி ஆகியோர் இறந்தபோது, தமிழகத்திலே வாழ்கிற தமிழர்களும், இலங்கையிலே வாழ்கிற தமிழர்களும்தான் மரணித்தவர்கள். இந்தியாவின் வெளியுறவு துறை இந்த நன்றியை மறந்து செயல்படுவது மிகவும் வருத்தத்திற்குரியது. இனியாவது, இந்திய அரசு ஈழத்த தமிழன்மீதான தங்களுடைய பார்வையை மாற்றி அமைத்து, அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கு உதவ வேண்டும்.

**நிகழ்ச்சி தொகுப்பாளர்:**

**இப்போது நடைபெறும் இந்த கருத்தரங்கத்திற்கு, ஏன் வேல்முருகன் போன்ற உணர்வாளர்களையும், மற்ற அரசியல் தலைவர்களையும் நீங்கள் அழைக்கவில்லையா?**

**திரு. தமிழினியன்:**

அன்றைக்கு, வேல்முருகன் வேறொரு நிகழ்ச்சியிலே பங்கு பெற, பங்கு பெறுவதற்காக ஒப்புதல் கொடுத்திருந்த காரணத்தினால், அவரை அன்றைக்கு அழைக்க முடியவில்லை. அவர்கள் தொடர்ச்சியாக ஈழத் தமிழர்களுக்காக சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த வாரத்திலே நடந்த அந்த ஆர்பாட்டம் கூட மிகச் சிறப்பான ஆர்பாட்டமாக இருந்தது. ஏற்கனவே, அவர் தொடர்ச்சியாக, “சிறப்பு முகாம்” என்கிற சித்திரவதை முகாம்களை மூட வேண்டும் என்றும், தன்னுடைய கோரிக்கையை வந்து தமிழக அரசுக்கு முன்வைத்துக் கொண்டிருக்கிறார். அதேபோல, கடந்த வாரம் கூட சென்னையிலே, சிறப்பு முகாம்களை இழுத்து மூட வேண்டும் என்று, வழக்கறிஞர் புகழேந்தி என்பவர் ஒரு... அவருடைய முன்முயற்சியிலே, ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வருகிற முதல் தேதியிலிருந்து, தொடர்ச்சியாக சிறப்பு முகாம்களை மூட கோரி, ஒரு கையெழுத்து இயக்கத்தையும் சென்னை உயர்நீதிமன்றத்திலே நடத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள்.

ஈழ ஆதரவு என்பது, நீர்ப்பூத்த நெருப்பாகத்தான் தமிழகத்தில் இன்றும் இருக்கிறது. அதை ஊதி எரிய வைத்து, இலக்கை அடைய வேண்டிய பணியை செய்ய வேண்டியது, நம்முடைய கடமையாக நாங்கள் கருதுகிறோம். அந்த வகையிலே, அண்ணா திமுக அரசாங்கம், பல்வேறு வகையிலே துணையாக இல்லை என்றாலும், தொந்தரவாக இல்லாமல், இந்த

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

**தமிழீழ மக்க. . .                    தொடர்ச்சி . . .**

உணர்வு பரவுவதை... அவர்கள், அவர்கள் ஆதரித்தே வந்திருக்கிறார்கள் என்பதுதான், கடந்த கால வரலாறாக இருந்திருக்கிறது. முதலிலேயே, நாடு கடந்த தமிழக அரசாங்கத்தினுடைய தோழமை மையமாக செயல்பட்ட நாங்கள்... அதற்கு பிறகு, நாடு... அண்ணா திமுக ஆட்சியில், "நாடு கடந்த தமிழக அரசாங்கம்" என்கின்ற பெயரிலேயே தொடர்ச்சியாக செயல்படுகிற அளவிற்கு, இங்கே அண்ணா திமுக ஆட்சியிலே, ஓரளவு எங்களுக்கு சுதந்திரம் இருந்தது; கருத்து சுதந்திரம் இருந்தது. ஆனால், இன்றைக்கு, அந்த கருத்து சுதந்திரம் இல்லாமல் போயிருக்கிற ஒரு சூழ்நிலையை தான் நாம் பார்க்கிறோம். இது நீண்ட காலம் நீடிப்பதற்கான வாய்ப்பு இல்லை. பல்வேறு வகையிலே, இங்கே கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்பது வெளிப்படையாக தெரிந்து கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு ஏற்படுகிற தேர்தலிலே, இதற்கு ஒரு நிச்சயமான மாற்றம் கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். அந்த வகையிலே, மீண்டும் நீறுபூத்த நெருப்பாக இருக்கிற ஈழ விடுதலை ஆதரவு என்பது, இங்கே பெரும் சூறாவளியாக, பெரும் தீப்பிழம்பாக வெடித்தெரியும், வெடித்து கிளம்பும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். அதற்கான பணிகளிலே நாங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு கொண்டிருக்கிறோம்.

தேர்தல் நெருக்கத்திலே, "இந்த சிறப்பு முகாம்களை மூடுவது", "ஈழ அகதிகளுக்கு குடியுரிமை கோருவது" என்கின்ற முழக்கங்களை, அனைத்து கட்சி தலைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற ஒரு திட்டத்திலும் நாங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறோம்.

அந்த ஈழ... அதாவது, வந்து போராட்ட காலங்களிலே வந்து, அங்கு வாழ முடியாமல் தமிழகம் நோக்கி தஞ்சம் தேடி ஓடி வந்த ஈழ தமிழர்கள், பல வருடங்களாகி, இப்போ அடுத்த தலைமுறையும் வந்து, தமிழகத்திலே பிறந்து, தமிழக மக்களாகவே, தமிழகத்திலேயே வளர்கின்றார்கள். இப்பொழுது பார்க்கின்ற வகையிலே வந்து, இந்திய அரசினுடைய நடவடிக்கைப் படி, எல்லோரையும் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடும் செய்யப்படுகின்றது என்ற ஒரு மிகவும் கவலைக்குரிய விடயம் இருக்கின்றது.

இதில் இரண்டு விடயங்களை பார்க்க லாம். ஒன்று, அந்த தமிழகத்திலேயே பிறந்து, தாங்கள் தமிழகத்தை சேர்ந்த தமிழர்கள் என்று உணர்வோடு வாழ்கின்ற தலைமுறையும், ஈழத்திலே இருந்து வந்த முதல் தலைமுறைக்கும், நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இப்போ திரும்பி போவது என்பதும், ஒரு வகையிலே வந்து, ஈழத்தை பொறுத்தவரை, அந்த அங்குள்ள நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. அந்த நிலங்களை நாங்கள் பாதுகாக்க வேண்டும். நிலம் பறிபோனால், எங்களுக்கு அங்கே இடமில்லை; ஈழத்த தமிழருடைய பூர்வீகமே பறிபோயிடும். அப்படியும் பார்க்க வேண்டும். அதே நேரத்தில, தமிழகத்திலே வாழ்ந்த பிள்ளைகளையும் வந்து, அவர்களை வில்லங்கமாக பிடித்து, ஏதாவது செய்து அனுப்ப முடியாது.

இப்போ, உதாரணமாக பார்த்தீர்கள் என்று சொன்னால், புலம்பெயர் தேசங்களிலே, நாங்கள் முதல் தலைமுறை, அடுத்த தலைமுறை என்று இருக்கின்றோம். இங்கு பிறந்த பிள்ளைகள் எல்லாம், இந்த நாட்டு மக்களாகத்தான் வாழ்கின்றார்கள். அவர்கள் இந்த நாட்டினுடைய பிரஜைகள் (குடிமக்கள்). அதே போன்றுதான், தமிழகத்திலே... இந்தியாவிலே நடக்கின்ற... இன்னும் ஒரு ஓரம்... சின்னம் என்று சொன்னால், ஈழ தமிழர்களுக்கு... அதாவது வந்து, எங்களுடைய மொழி, கலாச்சாரம், எங்களுடைய பண்பாடு, உணவு பழக்க வழக்கங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தும், இந்திய அரசு கூட வந்து ஈழ தமிழர்களுக்கு வஞ்சகம் தான் செய்கின்றது. மற்ற நாட்டுக்கு ஒப்பிடும் போது... திபெத்தியர்களை பார்த்தீங்கன்னா, திபெத்தியர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வச்சிருக்கின்றார்கள். ஆனா, ஈழ தமிழர்களுக்கும் அந்த ஆதரவு, இன்றைக்கு இந்தியாவில் இல்லை. அவர்கள் இப்பவும் வந்த ஒரு மூன்றாம் தர பிரஜைகளாகவும், அவர்கள் வேண்டாதவர்களாகதான் தமிழகத்தில் பார்க்கப்படுகின்ற ஒரு நிலைமை உள்ளது. இல்லையா? எதார்த்தம் இதான். உண்மை இல்லையா?

அது, 2009ஆம் ஆண்டுக்கு முன்பு, அந்த போராட்டம் வீச்சு பெற்றிருந்த காலங்களில, நிறைய தமிழகத்தில் இருந்த அரசியல்வாதிகளும் சரி, கனமான தமிழ் உணர்வாளர்களும் இருந்த வீச்சு, 2009ஆம் ஆண்டுக்கு பிற்பாடு வந்து, மெதுமெதுவாக, மெதுவாக குறைந்து கொண்டுதான் சென்றுள்ளது. இவர்களை எல்லாம் தட்டி ஒழுப்பி, நாங்கள் தமிழர்களாக ஒன்றுபட வேண்டியது வந்து காலத்தின் தேவை. அதுக்கு, உங்களை போன்ற செயற்பாட்டாளர்கள் இதில் மிக முக்கியமாக, நீங்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

குறிப்பாக, இங்கே தமிழகத்தில் வந்து, ஏறத்தாழ இருக்கிற அகதிகளிலே பாதி பேர் வந்து... ஏற்கனவே இங்கிருந்து போன மலையகதமிழர்கள்; இங்கிருந்து போய், அங்கிருந்து திரும்பிய மலையக தமிழர்கள். பாதி பேர்தான், ஈழத்தினுடைய பூர்வீகக் கொடிகளாக இருந்து இங்கே வந்தவர்கள். இப்படி இருக்கிறவர்கள்... மொத்தத்திலே பார்த்தீங்கன்னா, ஒன்று-இரண்டு லட்சம் பேர்தான் இருப்பாங்க. அந்த ஒன்று-இரண்டு லட்சம் பேருக்கு குடியுரிமை கொடுப்பதினால், தமிழகமோ அல்லது இந்தியாவோ, எந்தவிதமான இன்னலுக்கும் உள்ளாக போவது இல்லை. இங்கே இருக்கிற வளங்கள் என்பது ஏராளமானது. இன்றைக்கு, தமிழ்நாட்டிலே, வட இந்தியாவில இருந்து வருகிற தொழிலாளர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ ஒரு கோடியை எட்டிவிட்டது. அந்த ஒரு கோடி பேரும், இங்கே தமிழகத்திலே, தங்கள் சொந்த மண்ணை போல, சுகமாக வாழ்கின்ற, சுதந்திரமாக வாழ்கின்ற, விடுதலையாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

**நிகழ்ச்சி தொகுப்பாளர்:**

**இந்த பிரச்சினையைத் தீர்க்க, உண்மையாகவே தமிழக அரசு முழு முனைப்புடன் செயல்பட்டால், அதைச் சமாளிக்க முடியாதா?**

**திரு. தமிழினியன்:**

கண்டிப்பாக தீர்க்கலாம். இங்கே ஈழத் தமிழர்களை ஒடுக்குவதற்காகவே, ஒரு காவல் துறையில் தனி பிரிவை உருவாக்கி வைத்திருக் கிறார்கள்; 'கியூ பிரிவு' என்று சொல்லுகிற. அந்த கியூ பிரிவின் கட்டுப்பாட்டில் தான் ஈழத் தமிழர்களுடைய முகாம்கள் அனைத்தும், அவரு டைய கண்காணிப்பின் கீழ் தான் வருகிறது. அதற்காக தனி வட்டாட்சியர் (கலெக்டர்) இருக் கிறார்; அவர் வந்து, அவர்களுக்கான உணவுப் பொருள் பங்கீடுகளை எல்லாம் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் கலைத்து விட வேண்டும். இங்கே இருக்கிற ஈழ தமிழர்கள் மெல்ல மெல்ல கரைந்து, இந்த மண்ணோடு, இந்த மக்களோடு கரைந்துவிடுவதற்கான, கரைய செய்வதற்கான வேலைகளை தமிழக அரசு செய்யலாம். இவர்களுக்கு அது குறித்த சிந்தனையோ அல்லது அக்கறையோ இல்லை என்பதுதான் இதற்கான காரணமாக இருக்குமே தவிர, வேறு எந்த காரணமும் இல்லை.

உண்மையிலேயே இவர்களுக்கு அக்கறை இருந்தால், இவர்களை இந்நேரம் இந்த நாட்டின் குடிமக்களாக மாற்றி இருக்க முடியும். இந்திய அரசு ஓர் எதிர்ப்போ அல்லது தடையோ விதித்திருக்க முடியாது; இதற்கும் விதித்திருக்காது என்று நான் நம்புகிறேன். இந்திய அரசு ஓர் அழுத்தங்களை கொடுக்கவில்லை. இன்றைக்கும் கூட, விடுதலைப் புலிகள் மீதான தடையை காரணம் காட்டுவது, இந்திய அரசு... தமிழக அரசு பதிவு செய்திருக்கிற வழக்குகளை தானே தவிர, இந்திய அரசு எந்தவிதமான வழக்கையும் பதிவு செய்யவில்லை. ஆக, இந்திய அரசை வந்து காரணம் காட்டியவர்கள் சொல்வதெல்லாம் தவறானது. உண்மையிலேயே தமிழ்நாட்டு அரசுக்கு அக்கறை இருக்குமானால், புலம்பெயர் தமிழர்கள் அனைவரையும் மெல்ல மெல்ல கரைத்து, இந்திய குடியுரிமை கொடுத்து, அவர்களை இந்திய மக்களாக ஆக்கி இருக்க முடியும்.

இரண்டாவதாக, இதற்கு ஒரு மாற்று தீர்வாக, இங்கே இருக்கிற அரசியல் கட்சிகள், அரசியல் கட்சி தலைவர்கள், குறிப்பாக ஈழ தமிழர்களுடைய உரிமைகளை பேசுகிற, 'நாம் தமிழர் கட்சி' போன்ற கட்சியில் இருக்கிறவர்கள், கட்சி தலைவர்கள்... ஈழ தமிழ் அகதிகளுடைய பிள்ளைகளை, இங்கே திருமணம் முடிக்க என்கின்ற ஒரு முன்வைப்பை வைக்க வேண்டும். ஒன்று-இரண்டு லட்சம் பேர்தான் இருக்காங்க; ஒரு 20-30 பேர்தான் வந்து திருமண வயது இருப்பார்கள். அவர்களை எல்லாம், தமிழ் இளைஞர்களும் திருமணம் முடிக்க வேண்டும்; தமிழ் பெண்கள் வந்து திருமணம் முடிக்க வேண்டும் என்கின்ற ஒரு விஷயத்தை வைத்து, இவர்களை இந்த மண்ணோடு கலந்துவிட வேண்டும். கலந்துவிட்டால், அவர்கள் குடியுரிமை பெறுவது என்பது ஒரு எளிமையான ஒரு விஷயமாக மாறிவிடும். இதை நோக்கி நாம் நகர வேண்டும்; இதை வந்து கொண்டு போக வேண்டும்; அதற்கு அரசியல் கட்சி தலைவர்கள் முன்முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

• • •

**செயற்கை நுண் . .          . தொடர்ச்சி . . .**

AI தத்தெடுப்பு துரிதப்படுத்தப்படும் போது இந்த ஆரம்ப அறிகுறிகள் பரந்த தொழிலாளர் சந்தை சீர் குலைவுகளைக் ஏற்படுத்தலாம் என எச்சரிக்கிறது.

இந்த ஆய்வு மென்பொருள் மேம்பாடு, வாடிக்கையாளர் சேவை, கணக்கியல் மற்றும் நிர்வாக சேவை ஆதரவு ஆகியவற்றை மிகவும் பாதிக்கப்பட்ட தொழில்களாக அடையாளப் படுத்தியுள்ளது..

22 முதல் 25 வயதுடைய தொழிலாளர் களிடையே இதன் தாக்கம் குறிப்பாக வலுவாக உள்ளது, 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இந்தப் பணிகளில் வேலைவாய்ப்பு 6% குறைந்துள்ளது. மேலும் தொடக்க நிலை மென்பொருள் உருவாக்குநர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர், அவர்கள் 20% வீழ்ச்சியை எதிர்கொள்கின்றனர்.

இதற்கு நேர்மாறாக, அதிக மூத்த ஊழியர்கள் குறைவாகவே பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது. உண்மையில், மிகவும் பாதிக்கப் படக்கூடிய நான்கு தொழில்களில், வயதான தொழிலாளர்களிடையே வேலைவாய்ப்பு 2022 முதல் 6–9% அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், தளவாடங்கள், பரா மரிப்பு மற்றும் பிற நேரடித் துறைகள் போன்ற செயற்கை நுண்ணறிவால் இயக்கப் படும் ஆட்டோமேஷன் அல்லாத துறைகளில், இளம் தொழிலாளர்களுக்கான தொடக்க நிலை பதவிக ளின் எண்ணிக்கை 6–13% அதிகரித்துள்ளது.

**செம்மணி: மனித          . . . தொடர்ச்சி . . .**

முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின்போது, நேற்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூட்டுத் தொகுதிகளுடன் 174 எலும் புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக் கப்பட்டுள் ளன.

அத்துடன் இதுவரையில் 187 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட் டுள்ளன.

# அமெரிக்கா உருவாக்கப்போகும் விடுதலை இயக்கம்



வேல்ஸில் இருந்து **அருஸ்**

மீண்டும் கிறீன்லாந்து பிரச்சினை சூடு பிடித்துள்ளது.அதாவது கிறீன்லாந்தை கைப்பற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் நோக்கம் செயல்வடிவம் பெறுவதற்கான நடைவடிக்கைகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இந்த நோக்கத்திற்காக இரண்டு திரைமறைவு நடைவடிக்கைகளை அமெரிக்காவின் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டுள்ளனர். ஒன்று கிறீன்லாந்தை தன்வசம் வைத்துள்ள டென்மார்க் மீது அபகீர்த்தியை ஏற்படுத்துதல். அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.



அதன் வெளிப்பாடாகவே. கிறீன்லாந்தில் வாழும் பழங்குடி மக்களின் பிறப்பு விகிதத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் கட்டாயப்படுத்தப்பட்ட கருத்தடை திட்டத்தில் ஆயிரக்கணக்கான இளம் கிறீன்லாந்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அவர்களின் ஒப்புதல் இல்லாமல் கருப்பையக சாதனங்கள் (IUDs) பொருத்தப்பட்டுள்ளன என்ற செய்திகள் தற்போது முதன்மை பெற்றுள்ளன. இது தொடர்பில் டேனிஷ் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் மன்னிப்பு கோரியுள்ளார். "நடந்ததைநாம்மாற்றமுடியாது. ஆனால் நாம் பொறுப்பேற்க முடியும். எனவே,டென்மார்க் சார்பாக, நான் மன்னிப்பு கோரவிரும்புகிறேன்" என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநடைமுறை1960கள்மற்றும்1970களில் இடம்பெற்றிருந்தது, 2022 வரை இது தொடர்பில் பெரும்பாலும் அறியப்படவில்லை. அந்த ஆண்டு, டேனிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாட் காஸ்ட் ட்ஸ்பைரல் காம்பாக்னென் (திஸ்பைரல் பிரச்சாரம்) 4,500 பெண்கள் மற்றும் சிறுமிகள் வரை ஒப்புதல் இல்லாமல் கருத்தடை சாதனங்கள் உடலில் பொருத்தப்பட்ட பதிவுகளை வெளிக்கொண்டு வந்திருந்தது.

சில பெண்களுக்கு பிரசவத்திற்குப் பிறகு அவர்களுக்குத் தெரியாமல் சாதனங்கள் பொருத்தப்பட்டன, மற்ற சந்தர்ப்பங்களில் மொழித்தடை அவர்கள் கருத்தடை நடைமுறையைப் புரிந்து கொள்ளவிடாமல் தடுத்ததாகக் கூறப்படுகிறது. தற்போது வெளிவந்துள்ள தகவல்கள் பொது மக்களின் சீற்றத்தை அதிகரித்துள்ளன, மேலும் பொறுப்புக் கூறலுக்கான புதிய கோரிக்கைகளும் எழுந்துள்ளன.


Denmark summons US envoy over suspected influence operations in Greenland
By Jacob Gronholt-Pedersen and Soren Jeppesen
August 27, 2025 2:41 PM GMT+3 · Updated 1 hour ago

ஆனால் இது ஒரு திட்டமிட்ட இன அழிப்பின் வடிவம் என்பதை நாம் மறுக்க முடியாது. இலங்கையிலும் போர் நிறைவு பெற்ற பின்னர் 2010 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சியில் பல பெண்களுக்கு அவர்களுக்கு தெரியாமல் கருத்தடைகள் செய்யப்பட்டன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.தற்போது டென்மார்க் மீது இனஅழிப்பு குற்றம் சுமத்தப் பட்டாலும் அதனை மறுக்க முடியாது.




அதேசமயம், டென்மார்க்கின் மட்டுப் படுத்தப்பட்ட தன்னாட்சி பிரதேசமான கிரீன்லாந்தில் அமெரிக்காவின் தலையீட்டை அதிகரிப்பதற்கான புலனாய்வு நடவடிக்கைகள் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த தகவல்கள் தொடர்பாக, டென்மார்க் நாட்டின் உயர்மட்ட அமெரிக்க தூதரை டென்மார்க் அரசு வரவழைத்து இந்த வாரம் பேசியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புடன் தொடர்புடைய மூன்று அமெரிக்கர்கள் கிரீன்லாந்தில் நடைவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக டென்மார்க்கின் தேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அவர்களின் கருத்துப்படி பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட எட்டு உள்ளூர் அதிகாரிகளும் இந்த நடைவடிக்கையில் ட்றம் பின் அதிகாரிகளுடன் இணைந்துள்ளனர். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகள் என்பது கிரீன்லாந்துக்கும் டென்மார்க்கிற்கும் இடையிலான உறவுகளை பலவீனப்படுத்துவது, பிரிவினைவாத இயக்கத்திற்கு ஆட்களை ஆட் சேர்ப்பது என்ற நோக்கங்களைக் கொண்டது. கோபன்ஹேகனில் இருந்து பிரிந்து செல்வதை ஆதரிக்கும் கிரீன்லாந்துவாசிகளின் பட்டியல்களை ஒரு செயல்பாட்டாளர் சேரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிறீன்லாந்தில் உள்ள மக்களுடன் உறவுகளை ஏற்படுத்தி அவர்களை டென்மார்க்கிற்கு எதிராக திரும்பும் பணிகள் அங்கு இரகசியமாக இடம்பெற்றுவருவதாக டென்மார்க்கின் PET என்ற உளவுத்துறை தெரிவித்துள்ளதுடன், அதனை முறியடிப்பதற்கு ஏதுவாக தமது புலனாய்வு நடைவடிக்கைகளை கிரீன்லாந்தில் வலுப்படுத்தியுள்ளதாக PET தெரிவித்துள்ளது.

டென்மார்க்கின் உள் விவகாரங்களில் எந்தவொரு தலையீடும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று வெளியுறவு அமைச்சர் லார்ஸ் லோக்கே ராஸ்முசென் வலியுறுத்தியுள்ளார்,



கிரீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர விரும்புவதாக டிரம்ப் தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறார், அந்த தீவை ஒரு மூலோபாய ரீதியாக முக்கியமான சொத்து என்று அவர் அழைக்கிறார். அந்த இலக்கை அடைய இராணுவ சக்தியைப் பயன்படுத்துவதை கூட அவர் நிராகரிக்கவில்லை, ஆர்க்டிக்கில் அதன் கனிம வளத்தையும் அதன் தேவையையும் அவர் வலியுறுத்தி வருவதுடன்,அது ஒரு அழகான பனிக்கட்டி என்பதால் அல்ல, ஆர்க்டிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு, ஏவுகணை எச்சரிக்கை தளங்கள் மற்றும் இராணுவ மேன்மைக்கு பூமியில் மிகவும் மூலோபாயமான இடம் என்பதால் அது தமக்கு தேவை என தெரிவித்துள்ளார்.

ஆர்க்டிக்கை கைப்பற்றுவதில் ரஷ்யா மற்றும் சீனாவுடன் பரந்த போட்டியின் மத்தியில் கிரீன்லாந்தை அமெரிக்கா கட்டுப்படுத்த முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்த பிராந்தியத்தை வர்த்தகம்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## அமெரிக்கா உரு ... தொடர்ச்சி ...

மற்றும் மேம்பாட்டுக்கான “மகத்தான ஆற்றல்” கொண்ட ஒரு மண்டலம் என்று விவரித்துள்ளார். அதாவது அமெரிக்கா வடக்கில் ரஷ்யா மற்றும் சீனாவிலிருந்து வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது.

எனவே கிறீலாந்துவிவகாரம் மிகப்பெரும் பிரச்சினையாக மாறப்போகிறது. மூலோபாய ஆதிக்கம் தேவைப்படும் பெரிய சக்திகளுக்கு சிறிய நாடுகள் தடையாக நிற்கும்போது என்ன நடக்கும் என்பதை வரலாறு எமக்கு கற்றுத்தந்துள்ளது. உலகில் நடக்கும் மற்றும் நடந்த பல போர்களின் பின்னணியும் அதுவே. பல நாடுகள் சுதந்திரம் பெற்று தனிநாடு ஆகியதற்கும், பல இனங்கள் ஆதிக்க சக்திகளிடம் அகப்பட்டு தொடர்ந்து அடிமையாக வாழ்வதற்கும் அதுவே காரணம்.

கிறீன்லாந்து மிகப் பெரியது, அதன் மக்கள் தொகை மிகச் சிறியது,அதாவது சுமார் 5 மில்லியன் மட்டுமே. தீவைத் தாங்களே திறம்படக் கட்டுப் படுத்த முடியாத அளவுக்கு மிகக் குறைவு. தீவின் குறிப்பிடத்தக்க பகுதிகள் முற்றிலும் மக்கள் வசிக்காதவை. அனைத்து மக்களும் சில சிறிய நகரங்களில் குவிந்துள்ளனர். ஆனால் அவர்களின் தலைவிதியை அமெரிக்கா மற்றும் டென்மார்க் தீர்மானிக்கக்கூடாது என்ற கருத்துக்களும் உண்டு. எனினும், முழு தீவின் மீதும் அவர்களுக்கு அதிகார மில்லை என்றும் கூறப்படுகின்றது. மக்கள் வசிக் காத பகுதிகள் அமெரிக்கா, நோர்வே, கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய வற்றிற்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்க ளும் உள்ளன.

தீவை திறம்படக் கட்டுப்படுத்தவும், பாது காக்கவும், பயன்படுத்தவும் டென்மார்க்கிடம் எந்த வளங்களும் இல்லை. டென்மார்க் ஒரு மிகச் சிறிய நாடு, ஏற்கனவே அமெரிக்கர்கள் தங்கள் இரண்டு இராணுவத் தளங்களுடன் தீவில் பாதுகாப்பை வழங்குகிறார்கள். இருப்பினும், தீவு உண்மையில் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யவும், ரஷ்யா, சீனா அல்லது நாடற்ற தேசத்து மக்கள் இந்த கட்டுப்பாடற்ற நிலத்தைப் பயன்படுத்த முடியாது என்பதை உறுதிப்படுத்த அமெரிக்கா முற்பட்டு நிற்பதுடன், காலநிலைமாற்றத்தால் உருகிவரும் பனிப்பாறைகளும் ஆர்க்டிக் பிராந்தியத்தின் கனிம வளங்களை வெளிக்கொண்டுவருவதும் பிரதான காரணம்.




பூமியின் துருவங்கள் நகர்கின்றன - கிரீன் லாந்து மற்றும் அண்டார்டிகா மிக வேக மாக உருகி வருகின்றன, அவை கிரகத்தின் கட்டமைப்பை மாற்றுகின்றன - மேலும் பூமியின் துருவங்களை நகர்த்துகின்றன. 1900 முதல் 2018 வரையிலான தரவுகளை பகுப்பாய்வு செய்த விஞ்ஞானிகள், காலநிலை மாற்றம் ஏற்கனவே பூமியின் அச்சை மாற்றியமைத்து,GPS, செயற்கைக்கோள்கள் மற்றும் விண்வெளி பயணங்களை கூட சீர்குலைத்துள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளனர். தற்போதைய விகிதத்தில் பனிப்பாறைகள் மறைந்து கொண்டே போனால்,2100 ஆம் ஆண்டுக்குள் துருவங்கள் 90 அடி வரை நகரக்கூடும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

அதாவது பாதுகாப்புக்கு அப்பால் தற் போது மனிதர்கள் செல்லக்கூடிய பகுதிகளாக மாறிவரும் கிறீன்லாந்தின் அடியில் உள்ள கனிம வளம் தான் தற்போது அமெரிக்காவின் கவனத்திற்கான காரணம். டென்மார்க்கிடம் கனிமவளங்களை தாங்களாகவே பிரித்தெடுக்கும் தொழில்நுட்பமோ வளங்களோ இல்லை. அமெரிக்காவிடம் அந்த வளங்கள் இருந்தபோதும் அவர்கள் அதை டென்மார்க்கின் நலனுக்காக செய்ய விரும்பவில்லை. இந்த முடக்கம் யாருக்கும் பயனளிக்காது என்பதே அமெரிக்காவின் வாதம். ஆனாலும் அதனை தனது நேட்டோ கூட்டாளிக ளுடன் பகிர்ந்துகொள்ளவும் அமெரிக்கா விரும்ப வில்லை.

அதாவது உக்ரைனை தொடர்ந்து நேட்டோ கூட்டணி மோதும் மற்றுமொரு களமாக கிறீன்லாந்து இருக்கப்போகின்றது. ஆனால் அதனை நேரடியாகச் செய்யாமல் மறைமுகமாகச் செய்வதற்காக அமெரிக்கா ஒரு விடுதலை இயக்கத்தை உருவாக்கப்போகின்றது. அதன் முதற்கட்டமே புலனாய்வு அதிகாரிகளின் தரையிறக்கம்.

• • •

## கிறீன்லாந்தில் ... தொடர்ச்சி ...

கிரீன்லாந்துக்கும் டென்மார்க்கிற்கும் இடை யிலான உறவுகளை பலவீனப் படுத்து வதையும், பிரி வினை இயக்கத்திற்கு ஆட்களை ஆட்சேர்ப்பு செய்வதையும் நோக் கமாகக்கொண்டவை என்று நம்புகின்றன. கோபன்ஹேகனில் இருந்து பிரிந்து செல்வதை ஆதரிக்கும் கிரீன்லாந்துவாசிகளின் பட்டியல்களை ஒரு செயல்பாட்டாளர் தொகுத்து வந்ததாகக் கூறப்படுகிறது. தனிநபர்கள் சுயாதீ னமாக செயல்பட்டார்களா அல்லது உத்தரவின் பேரில் செயல்பட்டார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று ஒளிபரப்பாளர் கூறினார்.

டென்மார்க்கின் உள் விவகாரங்களில் எந்தவொரு தலையீடும் ஏற்றுக்கொள்ள முடி யாதது என்று வெளியுறவு அமைச்சர் லார்ஸ் லோக்கே ராஸ்முசென் வலியுறுத்தியுள்ளார், மேலும் அமெரிக்க பொறுப்பாளரை மார்க் ஸ்ட்ரோவை அமைச்சகத்தில் ஆஜராக உத்தர விட்டார். அமெரிக்காவிற்கு தற்போது கோபன் ஹேகனில் எந்த தூதரும் இல்லை ஸ்ட்ரோ மிகவும் மூத்த அமெரிக்க தூதராக உள்ளார்.

டென்மார்க்கின் PET உளவுத்துறை சேவை “பாரம்பரிய, உடல் ரீதியான செல்வாக்கு செலுத்தும் முகவர்களுடன் அல்லது தவறான தகவல் மூலம்” “தற்போதுள்ள அல்லது அறியப் பட்ட கருத்து வேறுபாடுகளை” பயன்படுத் திக் கொள்வதன் மூலம் “டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து இடையேயான உறவில் முரண் பாட்டை உருவாக்க” முயற்சிகள் நடப்பது குறித்தும் எச்சரித்துள்ளது. இதற்கு பதிலளிக்கும் விதமாக கிரீன்லாந்தில் தனது இருப்பை வலுப் படுத்தியுள்ளதாக PET தெரிவித்துள்ளது.

கிரீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவர விரும்புவதாக டிரம்ப் தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறார், அந்த தீவை ஒரு மூலோபாய ரீதியாக முக்கியமான சொத்து என்று அழைக்கிறார். அந்த இலக்கை அடைய இராணுவ சக்தியைப் பயன்படுத்துவதை அவர் நிராகரிக்கவில்லை, ஆர்க்டிக்கில் அதன் கனிம வளத்தையும் அதன் தேவையையும் அவர் வலியுறுத்தி வருகின்றார்.

ஆர்க்டிக்கை கைப்பற்றுவதில் ரஷ்யா மற்றும் சீனாவுடன் பரந்த போட்டியின் மத்தியில் கிரீன்லாந்தை அமெரிக்கா கட்டுப்படுத்த முயற்சிப்பதாகக்கூறப்படுகிறது. ரஷ்யஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்த பிராந்தியத்தை வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான “மகத்தான ஆற்றல்” கொண்ட ஒரு மண்டலம் என்று விவரித்துள்ளார்.






## ரணிலின் கைது... தொடர்ச்சி ...

முடியாத நிலை ஏற்பட்டிருந்தாலும், குற்றமிழைத்த பெரும் எண்ணிக்கையிலான அரசபடையினரும், அதிகாரிகளும் இன்னமும் சுதந்திரமாகவே இருக்கின்றனர்.

இது, அரசியல் தலைவர்கள் தங்கள் எதிரிகளை ஒடுக்குவதற்கு சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற பழைய அரசியல் கலாசாரத்தையே மீண்டும் தோற்றுவித்துள்ளது. இச்செயல்பாடு அநுர அரசாங்கத்திற்கு எதிரான எதிர்மறையான விம்பத்தை தோற்றுவிப்பதற்கும் அதன் சரிவுக்கு வழிவகுக்கக் கூடிய ஆபத்துக்களை உருவாக்கியுள் ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது, அரசியலமைப்பு ரீதியாக நிறைவேற்று அதிகாரங்களையுடைய ஜனாதிபதி ஒருவரின் அதிகாரங்கள் மற்றும் செலவீனங்கள் தொடர்பான விவாதங்களுக்கம் வழிகோலியுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் 33(ஊ) உறுப்புரை, ஜனாதிபதிக்கு தனது பதவிக்கு உட்பட்ட காலத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அதிகாரங்களையும் வழங்குகிறது.

ரணில் விக்கிரமசிங்க தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டது அவரது தனிப்பட்ட பயணம் என்றாலும், அது அவரது பதவிநிலை சார்ந்ததொன்றாகவே கருதப்பட முடியும் என்று முன்னாள் அமைச்சர் அலி சப்ரி போன்ற சட்ட வல்லுநர்கள் வாதிடுகின்றனர்.

ஏனெனில், அவர் இலங்கையின் ஜனாதிபதி என்ற காரணத்தினாலேயே அப்பல்கலைக்கழகம் அவருக்கு சிறப்பு அழைப்பும், விருந்துபசாரமும் வழங்கியது. இதுவொரு பாரம்பரியம் எனக் கொள்ளப்படலாம் என்ற தர்க்கம் வெகுவாகவே உள்ளது.

அதனால் ரணிலின் இக்கைது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பயணங்கள் மற்றும் தனிப்பட்ட பயணங்கள் என்பவற்றுக்கிடையேயான தெளிவான வரையறையின் அவசியத்தை உணர்த்துகிறது.

இந்த விவாதம், எதிர்காலத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள், அரசாங்க நிதியை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்த தெளிவான வழிகாட்டுதலை உருவாக்கக்கூடும். அதேவேளை, இந்த விவாதம் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் செயற்பாடு களையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஜனாதிபதி அநுர, கடந்த பாராளுமன்ற, உள்ளூ ராட்சித் தேர்தலின்போது தனது கட்சிப் பிரசாரங்களுக்கு அரசாங்க வாகனங்களையும், வளங்களையும் பயன்படுத்தியதை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டி, எதிர்காலத்தில் அவரும் இதே போன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளக் கூடும் என்ற எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இதே நேரம், ரணில் விக்கிரமசிங்கவின் கைது, சிதறிப்போயிருந்த எதிர்க்கட்சிகளை மீண்டும் ஒரே அணியில் ஒன்றிணைத்துள்ளது. சஜித் பிரேமதாச, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் தங்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து, ரணிலுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளனர்.

இந்த ஒற்றுமை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு பெரிய சவாலாக மாறியுள்ளது. ஒரு காலத்தில் 'ஆளை ஆள் குழி பறித்த' எதிர்க்கட்சிகள், ரணிலின் கைதுடன் ஒரே அணியாக கூடியுள்ளமையானது அரசாங்கம் தன்னிச்சையாகவும், அடாவடித்தனமாகவும் செயற்படுகிறது என்ற தோற்றத்தை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம், தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த விவகாரத்தில் இருந்து விலகியே இருந்தன. ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் தமிழர்களுக்கு இழைத்த அநீதிகள் காரணமாகவே அக்கட்சிகள் அமைதி காத்திருக்கின்றன.

1983 கலவரம், யாழ் நூலக எரிப்பு போன்ற சம்பவங்களுக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டியவர். தமிழர்களுக்கு நீதியை மறுப்பதற்கும், சர்வதேச சமூகத்துடன் தனது உறவுகளைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர் காரணமாக இருந்தவர்.

இந்த வரலாற்றுப் பின்னணி காரணமாக, தமிழ்க் கட்சிகள் அவருடன் நெருக்கமாக இருந்தாலும், மென்போக்குத் தன்மை காணப்பட்டாலும் அவருக்காகக் பகிரங்க வெளியில் குரல் கொடுப்பதை விரும்பவில்லை.

தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் கூட ரணிலின் விவகாரத்தில் தெளிவற்றதொரு பதிவையே இட்டிருந்தார். ஆனால் அவரால் பொது எதிரணியின் கூட்டங்களில் பங்குபற்றுமளவுக்கு துணிவு ஏற்பட்டிருக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது, அரசியல் பழிவாங்கல், அரசியலமைப்பு விவாதங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் அணிதிரளல் போன்ற பல பரிமாணங்களைக் கொண்டிருந்தாலும் சட்டத்தின் ஆட்சி குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதுமட்டுமன்றி, 'ஒரு கட்சி ஆட்சியை' மையப்படுத்திய ஜே.வி.பியின் முயற்சிகள் குறித்து எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களுக்கு இந்தக் கைது திடமான புடம்போட்டிருப்பதால் இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

• • •

## ஈழ அகதிகள்... தொடர்ச்சி ...

வேறு எந்த நாட்டுக்கும் செல்ல முடியாத வகையில் இந்திய அரசும் தமிழக அரசும் தடுத்து வைத்துள்ளது.மேலும் அசையும் அசையா சொத்துக்களையும் வாங்க முடியாது.

தமிழகத்தில் உள்ள 110 முகாம்கள் மற்றும் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளவர்களை சந்தித்து அவர்கள் துயரத்தைக்கேளுங்கள் என்று தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஈழப்போராட்ட... தொடர்ச்சி ...

அநுரவிடம் பழைய பல்லவியையே பாடியுள்ளார். அதாவது உள்நாட்டுப் பொறிமுறையை வலியுறுத்தியதாகவே அவருடைய கருத்து அமைந்திருந்தது. இது ஈழத் தமிழர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தாலும், எதிர்வரும் 2025, செப்டம்பர் அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானத்தில், உள்நாட்டுப் பொறிமுறையை வலியுறுத்துவதைத் தவிர்த்து, சர்வதேச அணுகுமுறைக்கான தேவை ஈழத் தமிழர்களின் கோரிக்கை என்பதை வலியுறுத்துவதாக அந்த அறிக்கை வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒட்டுமொத்த தமிழர்கள் மத்தியில் உண்டு.

இந்த எதிர்பார்ப்பு நிறைவேறுமா இல்லையா என்பது எதிர்வரும் 2025, செப்டம்பர் 15ல் அறிந்துகொள்ளலாம்.

• • •

## முள்ளிக்குள... தொடர்ச்சி ...

விடயத்தில் தம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் கடற்படையினரால் இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அபி விருத்தி ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டம் 26.08.202 5அன்று இடம் பெற்றது. குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் விவாதிக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் ரவிகரன் எம்பி. கருத்துத் தெரிவிக்கையில், முசலி பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமமக்களை மீளக்குடியேற்று வது தொடர்பில் தீர்க்கமான முடிவு தேவை.

முள்ளிக்குளம் கிராமமக்களை அவர்களுடைய சொந்த இடத்தில் மீளக்குடியேற்றுவது எப்போது?

தற்போது முள்ளிக்குளத்தில் மக்களின் காணிகளிலும், வீடுகளிலும் கடற்படையினர் அத்துமீறித் தங்கியுள்ளனர்.

எனவே மக்களின் காணிகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் கடற்படையினர் வெளியேற வேண்டும். ஆகவே எப்போது கடற்படையினர் அங்கிருந்து வெளியேறுவார்கள் என்பது தொடர்பில் பதிலளிக்கவேண்டும் என்றார்.

இந்நிலையில் கடற்படையினர் கருத்துத் தெரிவிக்கையில், இதுதொடர்பாக ஆலோசனை பெறுவதற்கான கடிதம் ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய பதில் கிடைத்தவுடன் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென கடற்படைத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

• • •

## கிறீன்லாந்தில் ... தொடர்ச்சி ...

அமைப்பு இன்னும் டேனிஷ் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது, மேலும் 2022 வரை இது தொடர்பில் பெரும்பாலும் அறியப்படவில்லை. அந்த ஆண்டு, டேனிஷ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பாட்காஸ்ட் ஸ்பை ரல் காம்பாக்னென் (தி ஸ்பைரல் பிரச்சாரம்) 4,500 பெண்கள் மற்றும் சிறுமிகள் வரை ஒப்புதல் இல்லாமல் கருத்தடை சாதனங்கள் உடலில் பொருத்தப்பட்ட பதிவுகளை வெளிக்கொண்டு வந்திருந்தது.

சில பெண்களுக்கு பிரசவத்திற்குப் பிறகு அவர்களுக்கு தெரியாமல் சாதனங்கள்பொருத்தப்பட்டன, மற்ற சந்தர்ப்பங்களில் மொழித் தடை அவர்கள் கருத்தடை நடைமுறையைப் புரிந்து கொள்ளவிடாமல் தடுத்ததாகக் கூறப்படுகிறது. தற்போது வெளிவந்துள்ள தகவல்கள் பொது மக்களின் சீற்றத்தைத் அதிகரித்துள்ளன. மேலும் பொறுப்புக்கூறலுக்கான புதிய கோரிக்கைகளும் எழுந்துள்ளன.

“இந்த வழக்கு பல கிரீன்லாந்துவாசிகளுக்கும் கிரீன்லாந்தில் உள்ள பல குடும்பங்களுக்கும் கோபத்தையும் துக்கத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்” என்று ஃபிரடெரிக்சன் புதன்கிழமை(27) தெரிவித்துள்ளார். “நடந்ததை நாம் மாற்ற முடியாது. ஆனால் நாம் பொறுப்பேற்க முடியும். எனவே, டென்மார்க் சார்பாக, நான் மன்னிக்க விரும்புகிறேன்” என்று கூற விரும்புகிறேன்.

“கிரீன்லாந்துவாசிகள்” என்பதற்காக “முறையான பாகுபாட்டிற்கு ஆளான சிறுமிகள் மற்றும் பெண்கள்” என்று பிரதமர் குறிப்பிட்டார், “அவர்கள் ஏமாற்றப்பட்டதற்காக, அவர்கள் அனுபவித்த உடல் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு” மன்னிப்பு கோரினார்.

இந்த ஊழல் குறித்து ஒரு சுயாதீன விசாரணை நடந்து வருகிறது, அதன் கண்டுபிடிப்புகள் செப்டம்பர் 2025 இல் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1970கள் மற்றும் 1980களில் உள்ள 143 பெண்கள் குழு கட்டாய கருத்தடை நடைமுறைகள் தொடர்பாக டென்மார்க்கின் உள்துறை மற்றும் சுகாதார அமைச்சகத்திற்கு எதிராக 2024 ஆம் ஆண்டில் வழக்குத் தொடர்ந்தது. அவர்கள் மொத்தம் கிட்டத்தட்ட 43 மில்லியன் குரோனர் (தோராயமாக $6.3 மில்லியன்) இழப்பீடு கோருவதாக அவர்களின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

கிரீன்லாந்தில் இருந்து குழந்தைகள் 1950களில் டென்மார்க்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டென்மார்க் 2022 இல் பொது மன்னிப்பு கேட்டது.

**காடுகளான ... தொடர்ச்சி ...**

ஒரு காலத்தில் ஈரானின் தேயிலை சந்தையில் ஆதிக்கம் செலுத்தி, பிராந்திய வர்த்தகத்தில் தன்னிறைவு பெற்றிருந்த இலங்கையின் இறையாண்மை குறைக்கப்பட்டது. தேயிலை துறையில் தனக்கான வாய்ப்பை இந்தியாவுக்கு விட்டுக் கொடுத்தது.

### தேவையான மாற்றம்

மீண்டும் சர்வதேச சந்தையில் ‘சிலோன் டீ’ என்ற வர்த்தக நாமத்துடன் எமக்கான இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு தற்போது பாரிய மாற்றங்கள் அவசியமாக உள்ளன. இதற்காக பல புதிய மூலோபாயத் திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். முதற்கட்டமாக தேயிலை துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பானதும் சம்பள ரீதி யாக திருப்தி மிக்கதுமான தொழில் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் தேயிலை தொழிற்துறையை விட்டு விலகும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை கட்டுப் படுத்த முடியும்.

தேயிலை தொழில் துறையின் அனைத்து பரிமாணங்களை யும் ஊக்குவிக்கும் வகையில், அரசு மற்றும் தனியார் துறைகள் இணைந்து ஒரு முறையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும். அத்துடன் புதிய நவீன தொழில்நுட்பங்களை தேயிலை தொழிற்துறைக்கு உள்வாங்குவதன் ஊடாக அதன் மீதான இளைஞர்களின் ஈர்ப்பையும் அதிகரிக்க முடியும். தற்போது காடுகளாக மாறி வரும் தேயிலை தோட்டங்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

சிறு தோட்டத் தனியார் துறையில் 75 சதவீத தேயிலை உற்பத்தியும் பெருந் தோட்டங்களில் 25 சதவீத தேயிலை உற்பத்தியுமே இடம்பெறுகின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இதற்காக, அரசும் தனியார் துறையும் இணைந்து, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் கொள்கைகளையும், புதிய சந்தை உத்திகளையும் கடைப்பிடிக்க வேண்டும். தரமான தேயிலை உற்பத்தியை மேம்படுத்துதல், தேயிலையைப் பதப்படுத்தும் முறைகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், சிறு தேயிலை உற்பத்தியாளர்களை மேம்படுத்துதல், மற்றும் ஏற்றுமதி வரி முறைகளை சீரமைத்தல் ஆகியவையும் ஏற்றுமதியை அதிகரிக்க உதவும்.

புதிய மாற்றங்களுடன் சர்வதேச சந்தைக்கு ஏற்ற தரத்துடன் இலங்கையில் தேயிலை தொழிற்துறை முன்னோக்கி செல்ல மறுக்கும் பட்சத்தில் அது இலங்கையின் பொருளாதாரத்திலும், தேயிலையை நம்பியுள்ள மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்விலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். உரிய திட்டங்களை வகுப்பதற்கு அரசாங்கம் தவறுமாயின் தேயிலை தொழிற்துறையின் வீழ்ச்சியை எவராலும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். அதே நேரம் இந்தியாவை போன்று சர்வதேச பொருளாதார நிலைக்கு ஏற்ப முன்கூட்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது காலத்தின் கட்டாய தேவையாகவும் உள்ளது.

• • •







**சர்வதேசத்திடம் ... தொடர்ச்சி ...**

பெற்ற யுத்தங்களை காரணம் கூறி எங்கள் உறவுகளை கடத்தப்பட்டு, யுத்தம் முடிந்து 17 வருடங்கள் கடந்த நிலையில் நீதி கிடைக்காமை தேடி வருகிறோம் இலங்கை நாடாளுமன்றம் ஊடாக காணாமல் போனோருக்கான அலுவலகம் திறக்கப்பட்டும் எவ்வித உண்மையும் இல்லை இதனால் சர்வதேச நீதியை கூட கிடைக்குமா என நம்பிக்கை இல்லை நீதிக்காகவும் உண்மையை கண்டறியவும் தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவே தான் சர்வதேச காணாமல் போனோர் தினத்திலாவது நீதி கிடைக்குமா என எம் உறவுகள் ஏங்குகின்றனர்”

இலங்கை அரசாங்கத்திடமும் சர்வதேசத்திடமும் இவ்வுறவுகளின் ஒரே கோரிக்கை புதிய பொறிமுறை ஊடான விசாரணையை வலியுறுத்தி நீதியை பெற்றுத் தர வேண்டும் என்பதே ஆகும்.

• • •

**செம்மணியைத்... தொடர்ச்சி ...**

எனவும் எண்ணத் தோன்றுகிறது.

படுகொலைகள், காணாமலாக்கியமை போன்ற விடயங்கள் விசாரிக்கப்படவும், பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கான நீதி கிடைக்கவும் வேண்டும் என்பதும் கட்டாயமானது. ஆனால் அவற்றைத் தமது பிழைப்புவாத அரசியலுக்காக இனவாத சிந்தனையுடன் செயற்படுத்தும் நிலை இல்லாது, நேர்மையாக நடந்தால் சிறப்பு. என்பதோடு, வீரமுனை, திராய்க்கேணி உள்ளிட்ட வடக்கு-கிழக்கிலும், நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்கள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட இடங்கள் அகழப்படவும், அவற்றிற்கான நீதி விசாரணைகள் சர்வ தேச கண்காணிப்புடன் நடைபெறவும், சர்வதேச நீதிப் பொறிமுறைகளுக்கூடான தீர்ப்புகள் வழங்கப் படவும் வேண்டும்.

• • •

**இனப்படுகொலை ... தொடர்ச்சி ...**

சுமார் 515 ஊழியர்கள் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. அது உண்மையாக இருந்தால், அது இந்த அலு வலகத்தின் உலகளாவிய ஊழி யர்களில் கால் பங்காக இருக்கும்.

இது ஐ.நா.வுக்குள் வளர்ந்து வரும் இயக்கத்தின் ஒரு பகுதியாகும், காசாவில் நடப்பதை ஒரு இனப்படுகொலை என்று அழைக்க ஐ.நா.வை ஒரு அமைப்பாக வலியுறுத்தும் ஊழியர்கள் அதன் உறுப்பினர்கள்.

எனவே, இது அனைத்தும் அதன் ஒரு பகுதியாகும், கடந்த சில வாரங்கள் மற்றும் மாதங்களில் நாம் அதிகரித்து வரும் அதன் வேகத்தைக் காண்கிறோம் என தெரிவிக்கப் படுகின்றது.

இதனிடையே, GHF நடத்தும் விநியோக தளங்களில் உணவு தேடி பட்டினியால் வாடும் பாலஸ்தீனியர்கள் “கட்டாயமாக காணாமல் போவதாக” வந்த செய்திகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இஸ்ரேல் இந்த “கொடூரமான குற்றத்தை” முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஏழு சுயாதீன நிபுணர்கள் வெளியிட்ட கூட்டு அறிக்கையில், ரஃபாவில் உதவி விநியோக தளங்களைப் பார்வையிட்ட பிறகு, ஒரு குழந்தை உட்பட பல தனிநபர்கள் “கட்டாயமாக காணாமல் போனதாக” தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் இராணுவம் “உதவி தேடும் மக்களை கட்டாயமாக காணாமல் போகச்செய்வதில் நேரடியாக ஈடுபட்டதாக” கூறப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்


இறுதிப் போர் முடிவில் இராணுவத்திடம் சரணடைந்த எங்கள் குழந்தைகளுக்கு என்ன ஆனது?
What happened to our children surrendered to the SL Army at war's end?
International Day of the Enforced Disappearances
Chemmani Mass graves
NDB bank



